Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 4 சனிக்கிழமை (18.03.2006) தொலைபேசி 222 3378 ஒலி 89

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# புதிய சமாதானத் தூதுவராக ஜோன் ஹன்ஸ்ஸன் நியமனம்



## நோர்வே அரசு நேற்று அறிவிப்பு

(ஒஸ்லோ)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவராக ஜோன் ஹன்ஸ்ஸன் பௌயர் (வயது-53) நேற்று நோர்வே அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கைக்கான நோர்வேயின் சமாதானத் தூதுவராகவிருந்த எரிக் சொல்ஹெய்மின் பணியை மேற்கொள்வதுடன் அவ ருக்குப் பதிலாளராகவும் செயற்படுவார் என நோர்வே அரசு நேற்று அறிவித்துள்ளது. இவரது நியமனம் தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

(12 ஆம் பக்கம் பார்க்க)



## உள்ளூராட்சித் தேர்தல் குறித்து தேர்தல் ஆணையாளருடன் சந்திப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவுக்கும் சகல மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்குமிடையிலான விசேட பேச்சு வார்த்தை இன்று நடைபெற வுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் ஆணையாளருக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு மிடையில் நடைபெறவுள்ள இரண்டாவது கூட்டம் இதுவாகும்.

தேர்தல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவது (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் விரைவில் மாற்றம் ஏற்படக் கூடும் என அரச வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

சில அமைச்சர்கள் மகிந்தவின் சிந்தனை அடிப்படையில் செயற்படவில்லை. இது குறித்து ஆய்வு செய்த ஜனாதிபதி அவர்களை மாற்றம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயை வெளியேற்றக் கோரி 21 ஆம் திகதி பிக்குகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வேயை வெளியேற்றக்கோரி எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப் படவுள்ளது.

தேசிய பிக்கு முன்னணி சார்பில் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அழை ப்பு விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் பிற்பகல் 2 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் தனிநாட்டை உருவாக்கும் சதியில் ஈடுபட்டுள்ள நோர்வேயை வெளியேற்ற வலியுறுத்தி இந்தப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால்

### ஆயுதக் குழுக்களின் செயற்பாட்டைக் கண்டித்து

(மட்டக்களப்பு)

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களின் ஆட்கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினரால் இந்த முழு அடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

வர்த்தக நிறுவனங்கள், அரச அலுவலகங்கள், சந்தைகள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

கல்முனை மற்றும் வாழைச்சேனையை மட்டக்களப்புடன் இணைக்கும் பிரதான வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டு வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய பகுதிகளில் இரா (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவில் அவசரமாகத் தரையிறங்கிய அமெரிக்க போர் விமானம்

(கொழும்பு)

அமெரிக்க இராணுவ வீரர்கள் 110 பேருடன் போர் விமானம் ஒன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு அவசரமாகத் தரையிறக்கப் பட்டது.

இவ் அமெரிக்க விமானம் ஹவாயிலிருந்து மாலைதீவின் தலைநகர் மலேக்கு மேலாக சென்று கொண்டிருந்தபோது விமானத்தின் முன்பகுதியில் புகை ஏற்பட்டதையடுத்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இதுகுறித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடித் தடையை நீக்குவதற்கு 21 ஆம் திகதி வரை காலக்கெடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடற்படையினரால் விதிக்கப்பட்டுள்ள மீன்பிடித்தடையை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் நீக்க வேண்டும் என மீனவர்கள் ஜனாதிபதிக்கு காலக்கெடு விதித்துள்ளனர்.

அக் காலப்பகுதிக்குள் மீன்பிடித்தடை நீக்கப்படாது விட்டால் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் யாழ். கச்சேரியை முற்றுகையிட்டு தொடர் மறியல் போராட்டம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி மீனவர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துடன் மேற்கொண்ட சந்திப்பினையடுத்து இக் காலக் கெடுவை விதித்துள்ளனர்.

இது குறித்து ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைக்கவுள்ளனர். இது தொடர்பாக சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவிக்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீன்பிடித் தடை தொடர்பில் கடந்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப் பேச்சுக்களின் போது மீனவர்கள் மீதானதடை மறுநாளே நீக்கப்படும் என்று தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ மீன்பிடித் தடை தொடர்பிலான (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான வழி முறைகள் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்

### இராணுவத் தளபதி வவுனியாவில் தெரிவிப்பு

(வவுனியா)

வன்னிப் பிராந்திய இராணுவ தலைமையகத்திற்கு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று விஜயம் செய்தார்.

வவுனியாவில் உள்ள 211 ஆம் படைப்பிரிவின் தலைமைத் தளத்தில் இராணுவத் தளபதிக்கு இராணுவத்தினர் வைபரீதியாக வரவேற்பளித்தனர்.

வன்னிப் பிராந்திய கட்டளைத் தளபதி மேயர் ஜெனரல் உபாலி எதிரிசிங்க தலைமையிலான முக்கிய அதிகாரிகளுடன் அங்குள்ள நிலைமைகள் குறித்து இராணுவத் தளபதி கேட்டறிந்தார்.

அதன் பின்னர் இராணுவ அதிகாரிகள், படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் மத்தியில் உரையாற்றிய இராணுவத் தளபதி நீண்ட கால அமைதிக்குப் பின்னர் தற்போது சமாதானப் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பறவைக்காய்ச்சல் பரவுவதை தடுக்க தேசிய திட்டம் அமுல்

இலங்கையில் பறவைக் காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்கான தேசிய திட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டு மக்கள் இந்த நோய் பற்றி வீணாக அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப்பிரிவுக்கு பொறுப்பான பணிப்பாளர் டாக்டர் நிமால் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

பறவைக்காய்ச்சல் பற்றிய அச்சமும், அதனால் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்களும் என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கை அகில இலங்கை கோழிப்பண்ணை உரிமையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இதேவேளை, இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா பறவைக் காய்ச்சல் பரவும் பட்சத்தில் அது பற்றி மக்கள் மத்தியில் விளக்கமளிப்பதற்கு முறையான திட்டத்தை வகுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நோய்பற்றிய அச்சத்தால் கோழி இறைச்சி, முட்டை ஆகியவற்றின் விலைகள் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளன. இதன் காரணமாக இவற்றின் விற்பனையில் ஈடுபட்டிருக்கும் 75 அயிரம் பேரின் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமைக்கு பரிகாரம் காணும் நோக்கிலேயே பெண்களின் பங்களிப்போடு இந்தத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றார். (க-9)

# சிறுவர் உரிமைகள் தொடர்பில் செயற்படும் குழுக்களுக்கு விழிப்புணர்வு அளிக்க திட்டம்

(கொழும்பு)

சிறுவர் உரிமைகள் தொடர்பில் செயற்படும் குழுக்களுக்கு விழிப்புணர்வு அளிக்கும் வேலைத்திட்டம் ஒன்றை சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் ஊக்குவிப்பு அமைச்சு ஆரம்பித்துள்ளது.

சிறுவர் தினத்துக்கு இணைவாக இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக அமைச் சர் சுமேதாஜி ஜயசேன தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய சிறுவர் பாதுகாப்பு சேவை ஆணையாளர் சரத் அபே குணவர்த்தன சுனாமியினால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்காக வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், சிறுவர் இல்லங்களைப் புனரமைத்தல் மற்றும் சிறுவர் இல்லங்களில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு கொடுப்பனவை அதிகரித்தல் ஆகிய செயற்பாடுகள் இதற்கு இணைவாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகக் கூறினார். (க-7)

# யாழ்ப்பாண நகரை அபிவிருத்திசெய்ய பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## வணிகர் கழகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அபிவிருத்தி செய்து, வீதிவிபத்துக்களைத் தடுக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், யாழ்ப்பாண வணிகர் கழகம் கேட்டுள்ளது.

அத்துடன் இதற்குத் தடையாக உள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸார் முன்வரவேண்டும் என்றும், வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக வணிகர் கழகம் விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த 8ஆம் திகதி எமது நிர்வாக சபை உறுப்பினர் யாழ். மாநகரசபை ஆணையாளரைச் சந்தித்து ஓர் புரிந்துணர்வான கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி, யாழ்.மாநகர சபையும் யாழ். வணிகர் கழகமும் இணைந்து யாழ். பொலிஸாரின் உதவியுடன் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வததென தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள நடைபாதை அங்காடி வியாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், யாழ்.போதனா வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்களும், வயோதிபரும், பொது மக்களும் பிரதான பாதையைப் பாவிப்பதனால் அது பாதுகாப்பற்றதாகவும் விபத்துக்கள் நிறைந்ததாகவும் அமைந்துள்ளது.

மேலும் இவ் அங்காடி வியாபாரத்தால் நகரின் மத்தியில் நிரந்தர வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே யாழ்.மாநகர சபையினர் யாழ்.பொலிஸாரின் உதவியுடன் நடைபாதை வியாபாரிகளை அகற்ற நடவடிக்கை எடுப்பது,

யாழ்.நகரின் மத்தியில் மின்சார நிலைய வீதியிலும், வைரவர் கோயில் வீதியிலும், ஸ்ரான்லி வீதியிலிருந்து பஸ் நிலையம் செல்லும் வீதியிலும் நெருக்கமாக சிற்றூர்திகள் ஆக்கிரமித்து நிற்பதனால் இங்கு எப்பொழுதும் வாகன விபத்துக்களும், வாகன நெரிசலும் காணப்படுவதுடன் இங்கு காணப்படும் தரம் குறைந்த சிற்றூர்திகளினால் அவ்வப்போது வெளியேற்றப்படும் டீசல் புகை மண்டலம் பாதசாரிகளுக்கும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் பெரும் கெடுதியை உண்டுபண்ணி வருகிறது.

வர்த்தக நிலையங்களுக்கு மிக அண்மையாக நிறுத்தப்படும் சிற்றூர்திகளின் டீசல் புகை மண்டலம் வர்த்தக நிலையங்களில் உள்ள பொருட்களிலும், துணிவகைகளிலும் படிந்து வர்த்தகர்களுக்கு பெரும் நஸ்டத்தை ஏற்படுத்தி வருகின்றது. அதனால் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

மேலும் மினிபஸ் புகைகளால் சுகாதாரக்கேடுகளும் ஏற்பட்டு வர்த்தகர்கள் பாதிக்கப்படுவதால் சிற்றூர்திகளை யாழ்.முற்றவெளிப் பக்கத்திற்குகூடிய விரைவில் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு பொலிஸாரின் உதவியைப் பெற்று முனியப்பர் கோவிலுக்குச் செல்லும் வீதியில் உள்ள அங்காடி வியாபாரிகளை கூடிய விரைவில் அகற்றி அந்தப் பாதையை முற்றவெளியில் சிற்றூர்திகள் தரிக்குமிடத்திற்கு செல்வதற்குப் பாவிப்பது எனவும் தீர்மானித்து, இதற்கு யாழ்.பொலிஸாரின் உதவியைப் பெறுவதற்கு நாம் கடிதம் அனுப்பியுள்ளோம்.

எனவே யாழ்.நகரை அபிவிருத்தி செய்ய யாழ்.மக்களின் ஒத்துழைப்பை யாழ்.வணிகர் கழகம் வேண்டி நிற்பதோடு, இதற்குத் தடையாக உள்ளவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாரையும் வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (க)

# துர்க்கா மழலைகள் பூங்கா திறப்பு

தாவளை-இயற்றாலை-கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கோட் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட துர்க்கா மழலைகள் பூங்கா எதிர்வரும் 20ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென் மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொள்ளவுள்ளார். (க-108)

# இராசி பலன்

**18.03.2006**
**(பங்குனி 4, சனிக்கிழமை)**
**திருதியை முற்பகல் 10.02மணிவரை**
**சுவாதி பின்னிரவு 5.48 மணிவரை**
**இராகுகாலம் 9.19-10.49மணிவரை**
**சுபநேரம் 3.19-4.49 மணிவரை**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி, அபூர்வ சந்திப்பு, ஆரோககியம், காரிய நன்மை. |
| இடபம் | பகைவர் நேசம், காரிய சித்தி, போசன சுகம், சுபசெய்தி. |
| மிதுனம் | வீண்பகை, காரிய தாமதம், புத்திரரால் கவலை, போசன சுகக்குறைவு. |
| கடகம் | மனச்சோர்வு, மாதாசுகம், வேலைச் சுமை, காரிய தாமதம். |
| சிங்கம் | அன்னியர் சந்திப்பு, பிரயாண நன்மை, காரியசித்தி, இனிய சம்பவம். |
| கன்னி | அதிக பிரயாசை, முயற்சி தாமதம், செல்வாக்கு, பணவிரயம். |
| துலாம் | நல்ல முயற்சி, ஆரோக்கியம், தொழில் நன்மை, போசனசுகம். |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், சயனசுகக்குறைவு, பிரயாணம், சுபசெலவு. |
| தனுசு | குடும்ப சுகம், மனமகிழ்ச்சி, காரிய சித்தி, பொருள்சேர்க்கை. |
| மகரம் | அதிகாரம், கடின உழைப்பு, பிறர் உதவி, நல்ல செய்தி. |
| கும்பம் | புதிய திட்டம், கட்டுப்பாடு, பிரயாணம், திடீர் நன்மை. |
| மீனம் | ஆரோக்கியக்குறைவு, வாகனபயம், வேலைச்சுமை, அபகீர்த்தி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# மெல்லக் கற்கும் மாணவர் பிரச்சினைக்குத் தீர்வு ஆசிரியர்கள் கையிலேயே உள்ளது

(தென்மராட்சி)

'பிள்ளைகள் சுதந்திரமாகக் கற்க நாம் அனுமதிக்க வேண்டும். கட்டுப்பாடுகள் போடக்கூடாது. ஆசிரியர்கள் பொறுமையுடன் சேவையாற்ற வேண்டும்'.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் லயன் க.துரைராஜா, கைதடி நுணாவிலில் அமைந்துள்ள தொழில்சார் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற மெல்லக்கற்கும் மாணவர்களை வலுவுள்ளோராக மாற்றுதல் செயற்திட்டத்தில் பணி புரியும் ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மேற்படி ஆசிரியைகளுக்கு 500அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், மற்றும் மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர்.லயன் க.துரைராஜா அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

'யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் மெல்லக்கற்கும் மாணவர்களின் பிரச்சினைகள் உச்சநிலையில் இருப்பதுகுறித்து அறியும் போது மிகவும் வேதனையாகவுள்ளது.

எமது பிரதேசம் முன்பொரு காலத்தில் கல்வியில் உச்சத்தைத் தொட்டு நின்றது. ஆயினும் இன்றைய நிலையில் மெல்லக்கற்கும் மாணவர்கள், இடைவிலகல் மாணவர்கள் போன்ற பிரச்சினைகள் உருவாகுவது கவலைக் கிடமானதாகவுள்ளது.

எனவே இத்தகைய பிரச்சினைகளின் தாக்கங்களைக் குறைப்பதற்கு ஆசிரியர்கள் மிகவும் பொறுமையைக் கடைப்பிடித்துத் தமது சேவையை ஆற்றவேண்டும். ஆசிரியர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். ஆசிரியர்கள் பிள்ளைகளின் மட்டத்துக்குக் கீழிறங்கிவந்து படிப்பிக்க வேண்டும்' என்றார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் அன்பளிப்புப் பொருட்களை வழங்கிவைத்து உரையாற்றும் போது,

தென்மராட்சி கல்விவலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களை வலுவுள்ளோராக மாற்றும் செயல்திட்டத்தில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் மிகவும் பாக்கியம் பெற்றவர்களாகவே கருதப்பட வேண்டியவர்கள்.

இந்த வகையில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இத்தகைய மாணவர்களின் உயர்ச்சிக்கான உதவிகளை லயன்ஸ் கழகம் வழங்கு வதற்குத் தயாராகவுள்ளது எனக் குறிப்பிட்டார். (து-16)

## முத்தலிப் கொலை வழக்கு;

# சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த சிறைச்சாலை அதிகாரிக்கு கட்டளை

புலனாய்வுத்துறை அதிகாரி லெப்.கேணல் முத்தலிப் கொலை வழக்கில் வாக்குமூலம் அளிக்க வேண்டிய சந்தேக நபரை முன்னிலைப்படுத் தாமை தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிக்கு நீதிமன்றம் கட்டளை அனுப்பியுள்ளது.

முத்தலிப் கொலை வழக்கின் சந்தேக நபரான ஏ.கே.கருணாரட்ண என்ற அனுரா தேசப்பிரிய தான் வாக்குமூலம் அளிக்க விரும்புவதாக கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதிபதி கிகான் பிலபிட்டியவிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால் கடந்த புதன்கிழமை சந்தேகநபரை நீதிமன்றில் சிறைச்சாலை ஊழியர்கள் முன்னிலைப் படுத்தவில்லை. இதனால் வழக்கை அன்று மாலை நீதிபதி ஒத்திவைத்தார். இருப்பினும் மாலையிலும் சந்தேக நபர் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இதையடுத்து நீதிமன்றத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி முன்னிலையாகுமாறு வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டார். இந்த வழக்கில் சஞ்சீவ், ஆறுமுகம் செந்தில்குமார் என்ற ராஜன், இராஜரத்தினம் சரஸ்வதி என்ற உமா ஆகியோர் சந்தேக நபர்களாக கைதுசெய்யப்பட்டுள்ளனர். (க)

# நீதிவான்களுக்கு கல்விச் சுற்றுலா

(கொழும்பு)

இலங்கை நீதிவான்களுக்கு கல்விச் சுற்றுலா ஒன்றினை சவுதி அரேபிய அரசு ஏற்பாடு செய்துள்ளது. இவர்கள் சவுதி அரேபியாவில் இஸ்லாமிய சட்ட திட்டங்களில் பயிற்றுவிக்கப்படுவார்கள்.

ஏப்ரல் மாதம் முதல்வாரத் தில் சவுதி நோக்கிச் செல்லவிருக்கும் நீதிவான்கள்த 10 தினங்கள் சவுதி அரேபியாவில் பயிற்சி பெறுவார்கள்.

இப்பயிற்சி நெறி இலங்கையின் காதி நீதிமன்ற சட்டமுறையில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று கல்விச் சுற்றுலாவில் கலந்துகொள்ளவுள்ள காதி நீதிவான்கள் இயக்கப் பொறுப்பாளர் காதி நீதிவான் எம்.எச்.எம்.யெஹ்யா தெரிவித்துள்ளார்.

இக்கல்விச் சுற்றுலாவில் உயர் நீதிமன்ற நீதிவான் சலீம் மர்சூப், மாவட்ட நீதிவானும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளருமான மொஹமட் மக்கி, காதி நீதிவான்கள், சபைத்தலைவர் எஸ்.எம்.ஏ.ஜெப்பார், இரத்தினபுரி காதி நீதிவான் எம்.எச்.எம். யெஹ்யா, கம்பஹா காதி நீதிவான் ஜே. மொஹமட் மொஹிதீன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-9)

# யாழில் இருந்து 40 ஆயிரம் சவப்பெட்டிகள் கொழும்பு வந்தால் நான்கு இலட்சம் தமிழர்களின் சவப்பெட்டி கிளிநொச்சி போகும்



## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை!

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்தில் உள்ள 40 ஆயிரம் இராணுவத்தினரது சவப்பெட்டிகள் கொழும்புக்கு வந்தால் கொழும்பில் உள்ள 4 இலட்சம் தமிழர்களின் சவப்பெட்டிகள் கிளிநொச்சிக்குப் போகும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலின் போதே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அவர் நேர்காணலின் போது மேலும் தெரிவித்ததாவது,

இந்தியா எப்போதும் ஒரே நாடாக இருந்தது இல்லை. காலனித்துவ ஆட்சிகளின் போது தான் இப்போதைய இந்திய ஆட்சி முறை உருவானது. அப்போதும்கூட மகாராஜாக்கள் பல பகுதிகளை ஆண்டு வந்தனர். இந்தியாவின் விடுதலைக்குப் பின்னர்தான் தற்போதைய ஆட்சி முறை உருவானது. இந்திய ஆட்சி முறையானது வரலாற்று ரீதியாக உருவானது அல்ல.

இந்தியா பாரிய நிலப்பரப்புக் கொண்டது. இந்தியாவில் இப்போதும் கூட சீக்கியர்கள் தனி நாட்டுப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகையால் இந்திய ஆட்சி முறையின் கீழ் இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

1948ஆம் ஆண்டு கூட செல்வ நாயகம் இந்திய ஆட்சிமுறையை முன் வைத்தார். ஆனால் இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கான பிரதேசம் என்பது ஒரு கற்பனையான அரசியல் அபிலாஷை. கிழக்குப் பிரதேசத்தில் பெரும்பான்மை காணிகளின் உரிமையாளர்களாக சிங்களவர்களே உள்ளனர். தமிழர்களுடன் முஸ்லிம்களும் இணைந்து வாழ்கின்றனர். ஆகையால் மொழிவழித் தீர்வு சரியல்ல. கிழக்குப் பிரதேசத்தில் மூவின மக்களே வாழ்ந்து வருகின்றனர்.

சிறிமாவோ அரசாங்கத்தில் தான் ஒற்றையாட்சி தத்துவக் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. அதை சந்திரிகா குமாரதுங்க மாற்ற எண்ணினார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒற்றையாட்சி கோட்பாட்டில் அவர் தெளிவாக உள்ளார். அதிகார ஆசையில் உள்ள சில இடதுசாரிகள் தான் கூட்டாட்சி முறை பற்றி மஹிந்தவை பேச வைக்கின்றனர். அவர்களுக்கு அரசியல் பலம் இல்லை. அரச சார்பற்ற நிறுவனங்களின் பணத்தைச் சார்ந்து இருப்பவர்கள் தங்கள் அரசியல் பிழைப்புக்காக மஹிந்தவை ஆதரிக்கின்றனர்.

இருப்பினும் ஜனநாயக சமூகத்தில் தென்னிலங்கை மக்களின் விருப்பமாக பேச்சுவார்த்தை மேசைக்கு மஹிந்த சென்றுள்ளார். 10 ஆயிரம் பயங்கரவாதிகள் ஆயுதம் எடுத்துவிடுவார்கள் என்ற அச்சத்தினால் மக்கள் அந்தத் தெரிவை மேற்கொள்ளவில்லை. சிங்கள, முஸ்லிம் மக்களும் ஆயுதமேந்தினால் பிரச்சினையை எப்படி தீர்க்க முடியும்?

ஒற்றையாட்சியின் கீழ் பேச்சு நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்தால் யுத்தத்துக்குத்தான் செல்ல வேண்டும். இந்த நாட்டின் ஜனநாயகத் தீர்ப்பை விடுதலைப் புலிகள் ஏற்கவேண்டும்.

ஈராக்கில் ஜோர்ஜ் புஷ் என்ன தீர்மானம் எடுத்தார்? டோனி பிளேயர் எதனடிப்படையில் அவருடன் இணைந்தார். ஆனால் ஒற்றையாட்சிக் கோட்பாட்டுக்கான மக்களின் தீர்ப்பை இங்கே மஹிந்த ராஜபக்ஷ பெற்றிருக்கிறார். பிரபாகரன் ஆயுமேந்த எந்த மக்களின் தீர்ப்பைப் பெற்றார். இது எவ்வாறானாலும் இங்கே முதலில் ஜனநாயகத்தை நாம் நிலைநிறுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகள் 10 ஆயிரம் பேர் ஆயுதம் எடுத்தால் 20 ஆயிரம் சிங்களவர்களும் அதே வழியில் ஆயுதம் எடுப்போம் என்று சொல்ல வேண்டும். இந்த விடயத்தில் சிங்கள இனம் சீர்குலைய அனுமதிக்க முடியாது.

கொழும்பில் இருந்து கொண்டு சிங்கள இனத்தவரைப் பார்த்து மனோ கணேசன் பேச்சுக்களில் விட்டுக்கொடுப்புகள் இல்லையெனில் யாழ்ப்பாணத்தில் உள்ள 40 ஆயிரம் படையினரது சவப்பெட்டிகளைப்பெற்றுக்கொள்ள சிங்களவர்கள் தயாராக இருக்க வேண்டும் என்கிறார்.

அப்படியானால் கொழும்பில் வாழ்கிற 4 இலட்சம் தமிழர்களது சவப்பெட்டிகளை எடுத்துச் செல்ல தயாராக இருக்குமாறு கிளிநொச்சிக்கும் அவர் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

தென்னிலங்கையில் முதலில் ஜனநாயக ரீதியாக செயற்படும் கட்சிகளை ஒருங்கிணைக்க நம்மால் ஏன் முடியவில்லை? விடுதலைப் புலிகளுக்கு மாற்றான டக்ளஸ், கருணாவை நாம் இணைத்துக்கொள்ள வேண்டும். அவர்களை ஆதரிக்க வேண்டும். அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

விடுதலைப் புலிகள் தங்களது இராணுவத்தைக் கலைத்துவிட்டால் துணை இராணுவக் குழுக்களினது ஆயுதங்களைக் களைவது அரசாங்கத்தின் பொறுப்பு.

விடுதலைப் புலிகள் பேச்சு மேசைக்கு வருவதே சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்குத்தான். நோர்வேயில் ஒரு அரசாங்கத்துக்கு இணையான அங்கீகாரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. நோர்வேயின் அனுசரணைப் பற்றிய கேள்வி புதிதானது அல்ல.

இலங்கை அரசாங்கம் தொடர்பிலான சர்வதேச சமுதாயத்தின் இத்தகைய இரட்டை நிலை நிறுத்தப்படவேண்டும். உலகில் எந்த ஒரு கெரில்லா போராட்டமும் 30 அல்லது 40 ஆண்டுகளுக்குத்தான். விடுதலைப் புலிகள் எமது பலவீனங்களைப்பயன்படுத்துமுன்னைகின்றனர்.

விடுதலைப் புலிகள் இப்போது பிரிந்துள்ளனர். அவர்கள் யுத்தத்துக்கு போக முடியுமானால் போகட்டும் என்றார் சம்பிக்க ரணவக்க. (க)

## ஆளும் கட்சிதான் வெற்றி பெறும் என்ற எண்ணத்தை தகர்ப்போம்

**ஜே.வி.பி. எம்.பி லால்காந்த**

இம்முறை உள்ளூராட்சித் தேர்தல்களில் ஜே.வி.பியே பெரும்பான்மைப்பலம் பொருந்திய முதன்மைக்கட்சியாக இருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

இந்த நாட்டின் மக்கள், ஜே.வி.பி. மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஆளும் தரப்புத்தான் வெற்றி பெறும் என்ற எண்மும் இந்தமுறை இதன்மூலம் தகர்க்கப்படும் எனவும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத்தேர்தல் முடிவுகள் தேசிய அரசியலில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தாது.

இருப்பினும் எதிர்காலங்களில் அரசியல் செல்வாக்கு செலுத்துவதற்கு இந்த தேர்தலினை அடிப்படையாக பயன்படுத்த முடியும் என்றும் லால்காந்த மேலும் தெரிவித்துள்ளார். (க)

## பொதுசன மாதாந்த கொடுப்பனவு மீளாய்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு மீளாய்வு செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு கல்வயல் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும், அன்று பி.ப. 2.00 மணிக்கு சாவகச்சேரி நகர கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும் இம் மீளாய்வு செயற்பாடு நடைபெறவுள்ளது.

சமூக சேவை பிரிவு உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். பொதுசன மாதாந்த கொடுப்பனவுகளை பெறுவோர் தமது பங்கீட்டு அட்டை, கொடுப்பனவு அட்டை என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-108)

## அடிக்கல் நாட்டல்

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலய சப்த தள இராஜ கோபுர அத்திவாரமிடல் வைபவம் அடுத்த மாதம் 3ஆம் திகதி காலை 10.47 மணிமுதல் 12.46 மணிவரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (க-132,133)

## சர்வதேசத்தை ஏமாற்றும் சந்திரா பெர்னாண்டோ! காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் விசனம்

(கொழும்பு)



**அமெரிக்கா உள்ளிட்ட முழுமையான சர்வதேசத்தினையும் இலங்கை அரசு நிராகரிப்பதாக பொலிஸ் மா அதிபரின் கருத்துக்கள் அமைகின்றன என்று தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.**

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பிலும் துணை இராணுவக் குழுக்கள் தொடர்பிலும் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக இணையத்தளமொன்றுக்கு பா. நடேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் சிறப்பு அதிரடிப் படையினர் மட்டுமே துணை இராணுவக் குழுவாக உள்ளதாக சந்திரா பெர்ணாண்டோ தெரிவித்திருந்தார்.

துணை இராணுவக் குழுக்களின் இருப்பையும் அவற்றை நிராயுதபாணிகள் ஆக்குவது தொடர்பாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உடன்படிக்கையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டது.

அதனை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. அண்மையில் அமெரிக்கா இராஜாங்கச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட மனித உரிமை அறிக்கையில் இலங்கையில் செயற்படும் குழுக்கள் தொடர்பில் விரிவாக விளக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலங்கை அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயத்தை அந்த அரசின் பொலிஸ் மா அதிபரும் அரச தரப்புப் பேச்சுவார்த்தைக்குழு உறுப்பினருமான ஒருவர் நிராகரிப்பது வேடிக்கைக்குரியது.

இக்கருத்தானது சமாதான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட்டு வரும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அனைத்தையும் நிராகரிக்கும் வகையில் அமைந்துள்ளது. அத்துடன் இத்தகைய செயற்பாடுகள் சர்வதேசத்தினையும் சிங்கள மக்களையும் ஏமாற்றும் செயற்பாடாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தாம் ஒரு பயங்கரவாத இயக்கம் என ஏற்றுக்கொண்டதாக கூறிய கூற்று மிகவும் அப்பட்டமான பொய்; முதிர்ச்சியற்ற கூற்று. பேச்சுக்களின் போது இன ஒடுக்குமுறை, அதற்கெதிரான போராட்டத்தின் தோற்றம், வளர்ச்சி, சுயநிர்ணய உரிமை தொடர்பாக விரிவாக சந்திரா பெர்னாண்டோவுக்கு விளக்கிக்கூறப்பட்டது.

அவற்றை விளங்கிக் கொள்ளதா நிலையில் இத்தகைய நேர்காணலை பத்திரிகைகளுக்குக் கொடுத்திருப்பது அவரின் முதிர்ச்சியற்ற, விவேகமற்றதன்மையையே எடுத்துக்காட்டுகின்றது.

தமிழீழ தேசிய இனப்பிரச்சினையின் ஒட்டு மொத்த அரசியல் காரணிகளை விளங்கிக்கொள்ளமுடியாத ஒருவரால்தான் இப்படி திரிபுபடுத்திக்கூறமுடியும்.

இத்தகையவர்களின் கூற்றுக்களும் செயற்பாடுகளுமே கடந்த காலத்திலும் விடுதலைப் போராட்டத்தின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன.

அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான அரசியல் போராட்டங்களை சாதாரண குற்றச்செயல் போன்று கணிப்பிடும் ஒருவர் தேசிய இன விடுதலைப் போராட்டம் நடக்கும் ஒரு நாட்டின் பிரச்சினைகளைக் கையாள்வதற்குப் பதிலாக பிரச்சினைகளை வளர்ப்பவராகவே இருக்கிறார் என்றார். (க)

## கிழக்கில் துணை இராணுவக்குழு இயங்குவதற்கு ஆதாரம் உள்ளது

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கில் இராணுவத்துடன் சேர்ந்து துணை இராணுவக் குழுவினர் இயங்குவதற்கான ஆதாரம் உள்ளது என்று இலங்கையின் தேர்தல் கண்காணிப்புக்குழுவின் அமைப்பு அறிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்ரிக்கோ இது தொடர்பில் கூறியுள்ளதாவது; வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு ஏதுவான சூழ்நிலை இல்லை. உதாரணமாக ஈ.பி.டி.பி. யினரால் தேர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது.

கிழக்குப்பகுதியிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துகிற வகையில் நிலைமை சாதகமாக இல்லை. துணைக்குழுக்கள் இயங்குகின்றன என்பதை நம்புவதற்கான ஆதாரங்களை நாங்கள் வைத்திருக்கிறோம் ஆகையால் உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்களை நாம் பயன்படுத்தப் போவதில்லை.

30 நாடுகளைச்சேர்ந்த சர்வதேச பார்வையாளர்களையே இங்கு ஈடுபடுத்த வுள்ளோம் என்றார் கிங்ஸ்லி றொட்ரிக்கோ. (க)

# இன்று ஒரு தகவல்

## மருத்துவரின் மன இறுக்கம்!

என் கூட படித்த ஒருத்தர் இப்பொழுது டாக்டராக இருக்கிறார். அவரைப் பார்த்துவிட்டு வரலாம் என ஒருதரம் போயிருந்தேன். அந்தச் சமயம் எனக்கும் உடம்பு சரியில்லை... அதைச் சொல்லி ஏதாவது மாத்திரை வாங்கி வரலாம் என்று நினைத்துக்கொண்டு போனேன். போய்ச் சொன்னேன்,உடம்பு வலிக்கு ஏதாவது மாத்திரை கொடுத்தால் பரவாயில்லை என்று. அவர் உடனே கேட்டார் மூட்டுக்குமூட்டு வலி கொஞ்சம் அதிகமாக இருக்கின்றதா என்றார்.

ஆமாம் என்றேன்!

காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கிற சமயம் தலை சுத்துகிற மாதிரி இருக்கா? என்றார். ஆமாம் என்றேன்! சாப்பாட்டைப் பார்த்தாலேயே அது வேண்டாம் என்று தோன்றுகிறதா? என்றார். ஆமாம் என்றேன்.

''நீங்கள் சொல்கிறது எல்லாம் ரெம்பச் சரி. அதை எப்படி இவ்வளவு நுணுக்கமாகக் கண்டுபிடிக்க முடிஞ்சுது?'' என்று கேட்டேன்.

''வேறு ஒன்றுமில்லை! அதே குணம் எல்லாம் எனக்கும் இப்ப இருக்கிறது! அது தான் அவ்வளவு சரியா சொல்ல முடிந்தது!'' என்று சொல்லிக்கொண்டே எழுந்து போய் நாலு மாத்திரையை எடுத்துக்கொண்டுவந்தார்.

எனக்கு இரண்டைக் கொடுத்துவிட்டு அவர் இரண்டை சாப்பிட்டுத் தண்ணியைக் குடித்தார். டாக்டர் என்பதனாலே வியாதிகள் விலகிப்போய் விடுவதில்லை. டாக்டர்களுக்கு ஏற்படுகிற மன இறுக்கம் (**Tension to doctors**) பல சமயங்களில் அவர்களுடைய ஆரோக்கியத்தையே பாதித்துவிடும். இதைப் பற்றியெல்லாம் கூட வெளிநாடுகளில் சில ஆராய்ச்சிகள் நடக்கிறது!

இங்கிலாந்தில் ஒரு புள்ளிவிபரம் எடுத்தார்களாம். அங்கே பொதுமக்களை விட டாக்டர்கள் தான் அதிகமாக தற்கொலை செய்துகொள்கிறார்கள்.மதுவினாலே கல்லீரல் அழற்சி ஏற்படுகின்ற விகிதமும் அதிகமாக இருக்கின்றது. டாக்டருடைய உடல்நலம் பாதிப்படைவதற்கு முக்கியமான காரணமாக இருப்பது மன இறுக்கம் தான். விளம்பர நிறுவனங்களில் வேலை செய்கிறவர்கள், பத்திரிகைக்காரர்கள், பொலிஸ் அதிகாரிகள், விமானிகள் ஆகியோரும் மன இறுக்கத்துக்கு ஆளாகிறார்கள். டாக்டர்கள் தான் சாகக்கிடக்கிற நோயாளியை எப்படியாவது பிழைக்க வைத்துவிடுவதற்காக சாப்பாட்டைக்கூட மறந்து இராத்திரி முழுவதும் கண் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கு! குழப்பம் வராமல் இருக்குமா? பாதி இராத்திரியிலேயே வந்து கதவை தட்டுவார்கள்... எழுந்து 'என்ன'என்று கேட்டால் ''உடனே புறப்படுங்க டாக்டர், அங்கே ஒருத்தர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்'' என்பார்கள்! குழப்பம் வராமல் என்ன பண்ணும்? சிலபேர்... நடு இராத்திரியிலேயே டாக்டர் வீட்டுக்கு போன் பண்ணி...''வயிறு வலிக்குது டாக்டர்... என்ன செய்யலாம் சொல்லுங்கள்!'' என்று கேட்பார்கள்.

இவரும் அவசரத்திற்கு ''இரண்டு அஸ்பிரின் மாத்திரையை போட்டுக்கொண்டு உறங்குங்கள்... காலையில் பார்க்கலாம்'' என்று போனிலேயே பதில் சொல்லுவார். அவர், உடனே டாக்டர் சொன்னது மாதிரி இரண்டு மாத்திரையை சாப்பிட்டுவிட்டு நிம்மதியாக உறங்கிவிடுவார்.

ஆனால் இங்கே டாக்டருக்கு தூக்கம் வராது! ஏன் தெரியுமா?

''அந்த ஆள் வயிறு வலிக்குது என்று சொன்னாரே, வயிற்றில் ஏதாவது கட்டி இருக்குமா? வேறு ஏதாவது பெரிய கோளாறு இருக்குமா? அஸ்பிரின் அவருக்கு ஏதாவது ஆபத்தை உண்டாக்கி விடுமோ?'' என்றெல்லாம் நினைத்து கவலைப்பட்டுக்கொண்டு இராத்திரி முழுவதும் டாக்டர் தூங்கமாட்டார்.

ஜான ஹோவி என்று ஒருவர். இங்கிலாந்தில் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் பொது மருத்துவத்துறை பேராசிரியர். அவர் நிறைய ஆய்வுகள் எல்லாம் செய்திருக்கிறார். பொது வைத்தியம் செய்கின்ற டாக்டர்களுக்கு மன இறுக்கத்தை உண்டாக்கிற சில காரணங்களை அவர் கண்டுபிடித்திருக்கிறார். அதிகமான எண்ணிக்கையில் நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வது ஒரு காரணம். தொந்தரவு செய்கிற நோயாளிகளும் ஒரு காரணம். சக பணியாளர்களிடையே எரிச்சல் கொள்வது இன்னொரு காரணம். தாமதங்கள்- இடையூறுகள் இதனாலேயே கோபம் கொள்வது ஒரு காரணம். இதையெல்லாம் கண்டுபிடித்து அந்தப் பேராசிரியர், டாக்டர்களுக்கு என்ன யோசனை சொல்கிறார் தெரியுமா? ''இடையூறுகள்- தாமதங்கள் எல்லாம் தவிர்க்க முடியாதன. அதனாலேயே டாக்டராக இருப்பவர்கள் பணியிலே எதிர்பார்க்க முடியாத சூழ் நிலைகள் ஏற்படும் என்பதை மனதார ஒப்புக்கொள்வார்கள. அப்படி ஒத்துக்கொண்டு அதனால் சமநிலையை இழக்காமல் இருக்க பழகிக்கொள்ளவேண்டும்'' என்கிறார்கள் அனுபவம் உள்ள மூத்த பொது வைத்திய டாக்டர்கள். இளைஞர்கள் மாதிரி அவர்கள் அவ்வளவு அதிகமான நெருக்கடிகளால் பாதிக்கப்படுவதில்லை.

நம்ம ஊரில் டாக்டர்களுக்கு 'குழப்பத்தை' அதிகப்படுத்துவது நோயாளிகள் தான். சில பேர் தனக்கு என்ன நோய் என்பதை டாக்டர்களிடம் சொல்லமாட்டர்கள்... அவர்கள் தான் டாக்டராச்சே! கண்டுபிடிக்கட்டும் என்று ஒரு நினைப்பு. இப்படிப்பட்ட ஒருவர் ஒரு டாக்டரிடம் வந்தார். ''உடம்பில் என்ன வியாதி'' என்று டாக்டர் கேட்டார்.''அதை நீங்கள் தான் கண்டுபிடித்து மருந்து கொடுக்கவேண்டும்'' என்றார் இவர். இதைக் கவனித்த இன்னொருவர் சொன்னார் ''இதோ பாரப்பா.. உடம்புக்கு என்ன என்பதை டாக்டரிடம் சொல்லி ஒத்துழைத்தால்தான் சிகிச்சை செய்வதற்கு வசதியாக இருக்கும். நோயாளியிடம் எதுவுமே கேட்டு தெரியாமல் வைத்தியம் செய்தால் அதற்கு அடுத்த தெருவிலே ஒரு ஆஸ்பத்திரி இருக்கு அங்கே போ!'' என்றார். அது எந்த ஆஸ்பத்திரி என்று ஆர்வமாகக் கேட்டார் இவர். ''மாட்டு ஆஸ்பத்திரி!'' என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே சிங்கள மக்களின் விருப்பம்

(கொழும்பு)

**தமிழ் மக்களைப் போன்று சிங்கள மக்களும் போரை விரும்பவில்லை. சமாதானத்தையே விரும்புகின்றனர். இவ்வாறு கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கருத்துக்கணிப்புக்களை மேற்கோள்காட்டி செய்திக்கட்டுரை ஒன்றை வரைந்துள்ளது. அந்தக் கட்டுரையின் விபரம் வருமாறு,**

அண்மையில் சிங்களவர்களை மட்டும் மையமாக வைத்து எடுக்கப்பட்ட புள்ளிவிபரம் ஒன்றின் மூலம், சமாதானப் பேச்சுக்கள் மூலம் ஒரு நிரந்தரத் தீர்வை காணவும் சமாதான முயற்சிகளுக்கு சாதகமாகவும் அவர்களது எண்ணக்கருக்கள் மாறி வருகின்றமை தெரியவந்துள்ளது.

சமாதான நம்பிக்கை குறியீடு எனப்படும் காலாண்டுக்கு ஒருமுறை எடுக்கப்பட்டுவரும் கணிப்பீடு ஒன்று வடக்கு-கிழக்குத் தவிர்ந்த இலங்கையில் ஏனைய மாகாணங்களில் எடுக்கப்பட்ட புள்ளி விபரமே இதுவாகும்.

1300 இலங்கையர்கள் பங்குபற்றிய இக் கணிப்பீடு கடந்த பெப்ரவரி 17ஆம் திகதிக்கும் மார்ச் 3 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் நடத்தப்பட்டுள்ளது.

போருமில்லை சமாதானமும் இல்லை என்று தற்போது இருக்கும் சூனியநிலை நீடிப்பது இலங்கைக்கு நல்லதல்ல என 95 வீதமான சிங்களவர்கள் நம்புகின்றார்கள். எனவே, அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்கள் மூலம் நிரந்தர தீர்வொன்றை காணவேண்டும்.இதே மாதிரியான கேள்விக்கு கடந்த செப்ரெம்பர் மாதத்தில் எடுக்கப்பட்ட கணிப்பை விட இது பத்துவீதம் அதிகமானது என்பது கவனிக்கத்தக்கது.

சமாதான உடன்படிக்கையால் பயனடைந்தீர்களா என்ற கேள்விக்கு 67 வீதமானவர்கள் தாம் பயனடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இதே கேள்விக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் எடுக்கப்பட்ட கணிப்பின்படி 57 வீதமானவர்களே தாம் சமாதான காலத்தில் நன்மையடைந்துள்ளதாக தெரிவித்திருந்தனர்.கடந்த ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட கணிப்பில் 72வீதமான சிங்களவர்கள் இப்பேச்சுக்கள் சாதகமான விளைவுகளையே சமாதான முயற்சிகளில் ஏற்படுத்தும் என கருதுகின்றார்கள். அதேநேரம் 23 வீதமானவர்கள் இதுபற்றி நிச்சமற்ற நிலையில் இருப்பதும் குறிப் பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் 2003ஆம் ஆண்டு சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்திய காலத்திற்கு முன்னதாக நோர்வேயின் மத்தியஸ்தம் தொடர்பாக எடுக்கப்பட்ட கணிப்பிற்கு 44 வீதமான சிங்களவர்களே நோர்வேயின் அணுகுமுறையில் திருப்தி கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் இதே கேள்விக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் நோர்வேயின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் 26 வீதமாக குறைந்தது. எனினும் கடந்த பெப்ரவரியில் எடுக்கப்பட்ட கணிப்பில் நோர்வே மீது சிங்களவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை மீண்டும் 44 வீதமாக உயர்ந் துள்ளது.

எனினும், இதே கேள்விக்கு 32 வீதமானவர்கள் தமது நம்பகமற்ற தன்மையை வெளிப்படுத்தியதையும் 20 வீதமானவர்கள் நடுநிலையை வகித்ததும் கவனத்தில் கொள்ளலாம்.

நோர்வே பிரதிநிதியாக இப்பேச்சுக்களை முன்னெடுக்கும் எரிக்சொல்ஹெய்மின் பங்களிப்பு பற்றிய கேள்விக்கு 38 வீதமானவர்கள் ஆதரவு தெரிவிக்கும் அதேவேளை, 45 வீதமானவர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

இக்கணிப்பின் மூலம் அண்மைக் காலங்களில் சிங்களவர்கள் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு முகம் கொடுக்க தயாராக இல்லை என்பதனை அறியக் கூடியதாகவுள்ளது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஜே.வி.பி.மற்றும் ஹெல உறுமய போன்ற சமாதான விரோத சக்திகளின் சமாதானத்திற்கு எதிரான சதிகளில் எவ்வளவு தூரம் வெற்றி பெறுவார்கள் என்பதனை பொறுத்திருந்தே அறியவேண்டியுள்ளது என்று அச் செய்திக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# நுளம்பை ஒழிக்கச் சட்டம்

(கொழும்பு)

நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கான விசேட வழிமுறைகளை அறிமுகப்படுத்தும் சட்ட மூலத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இதனால் அதனை விரைவில் பாரளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் கோரப்போவதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் தமது இல்லங்களிலும் சுற்றுப்புறங்களிலும் நுளம்புகள் பரவ இடமளிப் போருக்கு 25 ஆயிரம் ரூபா வரையிலான அபராதம் விதிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் சுற்றாடலை மாசுபடுத்தக்கூடிய பொருட்கள் வீசப்படுவதைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# ஏலவிற்பனை

பருத்தித்துறை நீதிமன்றில் பல்வேறு சம்பவங் களின் போது மீட்கப்பட்ட உடமைகள் பல பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. இன்று காலை 9 மணிக்கு மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண் டிகள், தங்கச் சங்கிலி, கைத் தொலைபேசி, சபல்கள், கோடரிகள், மணல்கள் என்ப னவே ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப்பதிவாளர் வ.மார்க் கண்டு

# பாராளுமன்றத்தில் அரசின் பலம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறதாம்



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பாராளு மன்றத்தில் நாளுக்கு நாள்பெரும்பான்மை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. இதனால் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் 2009 ஆம் ஆண்டுவரை எவ்விதமான தேர்தல்களும் இடம் பெறா தென அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறி பால டி சில்வா தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஆறு மாத காலத்திற்குள் சகல தேர்தல் முறைகளிலும் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

அவ்வாறு மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் தொடர்பான சட்டமூலங்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்த பின்னரான ஆறுமாத காலத்திகுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# வடக்கு-கிழக்கில் வெற்றியளிக்கும் அபிவிருத்திச்செயல் திட்டங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு சிவில் புனரமைப்பு மற்றும் அபி விருத்திச் செயல் திட்டங்களின் செயற்பாடுகள் வெற்றியளித்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

மஹிந்த சிந்தனையின் கொள்கைகளுக்கமைய பிரதேச, சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்பட்டது.

வட-கிழக்கில் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியே செயற்திட்டத்தின் முக்கிய நோக்க மாகும். யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேற்றி அவர்களின் சமூக வாழ்வை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இத் திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப் பட்டிருப்பதாக அமைச்சின் செயலாளர் கர்ச்வின் கேரத் தெரிவித்தார்.

கல்வி, மருத்துவம், நீர் விநியோகம், சுகாதாரம் போன்ற வசதிகளும் இச்செயற்திட்டம் மூலம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்திட்டத்திற்கென செலவு செய்யப்படும் தொகை எட்டுக் கோடியே 54 இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். ஆசிய அபிவிருத்தி வங்கி , ஒபேக் நிதியம், ஜேர்மன் அரசு மற்றும் நெதர்லாந்து அரசாங்கம் என்பன இந்நிதியுதவிகளை வழங்குகின்றன. (து)

# சுதந்திர ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அமைக்க நடவடிக்கை

சுதந்திர ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பானதிட்டம் தேசிய ஔடத கொள்கையைத் தயாரிக்கும் முதல் முயற்சியாக அமுல் செய்யப்படும்.

நீண்டகால தேவையாகக் காணப்படும் தேசிய மருந்துக் கொள்கைகளை உருவாக்குவது இதன் நோக்கமாகும். பேராசிரியர் சியனக்பிபிலே மருந்துப்பொருட்கள் தொடர்பான சர்வதேச சக்திகளுக்கு சவால் விடுக்கும் வகையில் 1971 ஆம் ஆண்டு ஔடத கொள்கைகளைத் தயாரித்திருந்தார்.


அதன் அடிப்படையில் தேசிய கொள்கைகள் வகுக்கப்படுகின்றது. இதுதொடர்பான நகல் சட்ட மூலத்திற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்து பொது மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துப் பொருட்களை பெற்றுக்கொடுப்பது பற்றி மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடத்தில் கூறப்பட்டிருந்தது.

அவற்றின் பிரகாரம் இத் திட்டங்கள் அமுலாக்கப்படுமென்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய ஔடதக் கொள்கைகள், ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஆகியன தொடர்பானசட்டதிட்டங்களை இந்தவருடத்திற்குள் பூர்த்தியாக்கவும் அரசாங்கம் எண்ணியுள்ளது. (க-9)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில்

# நோர்வே அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது- ரணில் பாராட்டு



(கொழும்பு)

நோர்வேயின் புதிய அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நோர்வே அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் இலங்கையின் ஆட்புல இறைமையை பாதுகாக்கும் விதத்தில் தீர்வொன்றை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரசால் தனித்து இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது. இதனாலேயே உதவி வழங்கும் நாடுகளான ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் இந்தியா ஆகியவற்றின் உதவியை அரசு கோரி வருகின்றது.

இதனால் வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு மேற்குறிப்பிட்ட நாடுகள் இணைந்து செயற்பட வேண்டியுள்ளதாகவும் அதிலிருந்து விலகக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கை அரசும் குறித்த நாடுகளுடன் ஒன்றிணைந்து ஆட்புல இறைமையை பாதுகாத்து, ஜனநாயகத்தை பாதுகாத்து மூன்று இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (க-9)

## காசநோயைக் கட்டுப்படுத்த புதிய சிகிச்சைமுறை அறிமுகம்

(கொழும்பு)

காசநோயை கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய சிகிச்சை முறையொன்றை தற்போது இலங்கைக்கு அறிமுகப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

இதற்கு சர்வதேச சுகாதார அமைப்பின் நிதியுதவி கிடைக்குமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காசநோயை துரிதமாக கண்டு பிடிக்கும் நடவடிக்கையை பலப்படுத்தியுள்ளதாகவும் இவ்வாறான ஒரு செயற்திட்டம் மூலம் நோயாளர்களை துரிதமாக இனங்காண முடியுமென்றும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற விசேட கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (க-9)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கண்டுவில் வீதி புவேந்தன் பாலர் பாடசாலை பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலைய தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை பிரிவின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல்வி க.தீபாவும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு சிறுவர் நன்னடத்தை அலுவலர் எஸ்.சிவகரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-108)

## சென்னை- கொழும்பு இடையே புதிய சரக்கு கப்பல் சேவையில்

சென்னைக்கும் கொழும்பு துறைமுகத்துக்குமிடையே புதிய சரக்குக் கப்பல் போக்குவரத்து கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கப்பல் சேவையின் தொடக்கவிழா சென்னை சரக்குப் பெட்டக முனைய வளாகத்தில் நடைபெற்றது.

புதியசரக்குக்கப்பல் 'கிலாரிஸா' வின் சேவையை கர்ட்டி கோஸ்ட் டூ கோஸ்ட் நிறுவன துணைத் தலைவர் டி.குமரன் கொடியசைத்துத் தொடக்கி வைத்தார்.




நிகழ்ச்சியில் சென்னை சரக்குப் பெட்டக முனைய (சி.சி.டி.எல்.) தலைமை அதிகாரி என்னரசு கருணேசன் கூறியதாவது,

நாட்டின் இதர துறைமுகங்களுடன் ஒப்பிடும் போது சென்னை துறைமுகம் விரைவாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

சென்னை வழியாக சரக்குப் போக்குவரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து உலகின் பல்வேறு நாடுகளுக்கு சென்னை துறைமுகத்தில் இருந்து நேரடியாக கப்பல்களை இயக்க கப்பல் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இதன் ஒரு பகுதியாக 'கிலாரிஸா' என்ற புதிய சரக்குக் கப்பல் சென்னையில் இருந்து இலங்கையின் கொழும்பு துறைமுகத்துக்கு வியாழக்கிழமைதோறும் சேவையில் ஈடுபடவுள்ளது.

அந்தமான் மற்றும் வங்கக் கடலில் அமைந்துள்ள துறைமுகங்களில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு விரைவாக சரக்குகளை கொழும்புவழியாக அனுப்பிவைக்க முடியும்.

சி.சி.டி.எல். நிறுவனம் ஒரு மணி நேரத்தில் 30 சரக்குப் பெட்டகங்களை விரைவாகக் கையாண்டு சாதனை புரிந்துள்ளது.

ஓரிரு வாரங்களில் பல புதிய வழித்தடங்களில் சென்னையிலிருந்து நேரடியாக சரக்குக் கப்பல்கள் இயக்கப்படவுள்ளன என்றார். (க)

## உள்ளூராட்சித் தேர்தலில் மக்களுக்கு அக்கறையில்லை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து வாக்காளர்கள் அதிக அக்கறை செலுத்தவில்லை எனபவ்ரல் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

பிரசாரப் பணிகளில் வேட்பாளர்கள் மட்டுமே ஈடுபட்டு வருவதாகவும் பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பவ்ரல் அமைப்பின் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான முதலாவது இடைநிலை அறிக்கை கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

இதன்போது உரையாற்றிய அவர், உள்ளூராட்சிசபைத்தேர்தல் வன்முறைகளில் இதுவரை எந்த உயிரிழப்பு சம்பவங்கள் குறித்த முறைப்பாடும் கிடைக்கவில்லை என்றும், இந்த நிலைமை மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (க-9)

## இந்தியாவில் இருந்து 8பேர் மன்னார் வந்தடைந்தனர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை தலைமன்னாரை நோக்கி வந்த 8 அகதிகளை கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யுத்த காலத்தில் இந்தியாவிற்கு சென்ற இவர்கள் படகுகள் மூலம் தலைமன்னாரை வந்தடைந்தனர். இவர்களில் மூன்று பெண்களும் உள்ளடங்குகின்றனர். (க-9)

## தேசிய விழிப்புணர்வு நிறுவகம் நடாத்திய பொது அறிவு போட்டியில் பரிசு பெறும் மாணவர்கள்

நூலகர்கள் நூலகத்திலுள்ள நூல்களை ஒழுங்கு செய்வது எவ்வாறு என்பன போன்ற விபரங்களை உள்ளடக்கிய 'நூலகர் பகுப்பாக்கம் நூல்கள் கைநூல்' என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழாவும், 2005ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தேசிய விழிப்புணர்வு நிறுவனம் நடத்திய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தேசிய விழிப்புணர்வு நிறுவகம் மாணவர் மத்தியில் அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை தூண்டுமுகமாக மாணவர் மத்தியில் நடாத்திய பொது அறிவுப் போட்டியில் முதலாவது பரிசினை சென்.ஜோசப் மகாவித்தியாலய மாணவன் ஜெனஸ் கனோஜினும், 2ஆம் பரிசினை சென். அன்ரனிஸ் ஆர்.சி.வித்தியாலய மாணவி செல்வி ஜெவின் மஜித்ராவும், 3ஆம் பரிசினை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர் சந்தான குமாரசர்மா, சக்திபால சர்மா ஆகிய இருவரும், ஆறுதல் பரிசினை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி சோபனா குலநாயகம், யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள் தர்மகுலசிங்கம் புஜங்கன் ஆகியோரும், யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் ஜே.பிரசாத், விக்னேஸ்வராக் கல்லூரி மாணவிகள் தாரகா திருநாவுக்கரசு, நிஷாந்தினி செல்வராஜா ஆகியோரும் பெறவுள்ளனர்.

பொதுமக்களிடையே நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் முதலாம் பரிசை ஜோர்ஜ் ஜெஸ்ரினும், இரண்டாம் பரிசை பரதநாதன் சங்கியும், மூன்றாம் பரிசினை கே.சுரேந்திரனும் பெறவுள்ளனர்.

ஆறுதல் பரிசுகளை வினிதா அருளானந்தம், நடராசா காண்டீபன், அன்ரனினா நவரத்தினம், சற்குணசிங்கம் பிறேமிலன், கிறோமி அன்ரனிராஜ் ஆகியோரும் பெறவுள்ளனர் என நூலக விழிப்புணர்வு நிறுவகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

போதிய நூலக வசதி இருந்தும் அதற்கான இதர வசதிகள் இல்லாத நூலகங்கள், சனசமூக நிலையங்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு மேற்படி நிறுவனம் கேட்டுள்ளது. (து-132,133)

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் ஊர்வலம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் ஊர்வலம் நடத்தினர்.

சம்பள மறுசீரமைப்பு தொடர்பான சுற்றறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவின் முன்பாக ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒன்று கூடி பின்னர் அங்கிருந்து மஹிந்த ராஜபக்ஷவின் அலரிமாளிகை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

அரசாங்கத்தின் சர்ச்சைக்குரிய சுற்றறிக்கையை இரத்துச் செய்யக் கோரி அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

அலரிமாளிகைக்கு முன்பாக அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் ஊர்வலத்தினர் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்களது பிரதிநிதிகளை மட்டும் ஜனாதிபதி மஹிந்தவை சந்திக்க அனுமதித்தனர்.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனை பணிகள் பாதிக்கப்பட்டன.

இதேவேளை, இந்தப் போராட்டத்தால் கொழும்பில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது. (க-9)

## இடமாற்றம்

ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் காரியாலயம் தற்பொழுது இல.30 மார்ட்டின் வீதிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. (க)

## கடற்படை முகாம் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியருகே அமைந்துள்ள கடற்படையினரின் மினி முகாம் பாரிய அளவில் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றமை தீவுப்பகுதி மக்கள் மத்தியில் அச்ச உணர்வை தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு அமைக்கப்பட்டு வரும் முகாமைச் சுற்றி புல்டோசர்களின் உதவியுடன் பாரிய மணல் அரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, சகல தீவுப் பகுதிகளுக்குமான நுழைவாயிலாக அல்லைப்பிட்டி சோதனைச் சாவடி விளங்குவதுடன் இதனூடாகச் செல்லும் பயணிகள் கடற்படையினரின் தீவிர சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க)

## தனியார் பஸ் கட்டணங்களை 20 வீதத்தால் அதிகரிக்கத் திட்டம்

பஸ் உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பு காரணமாக தனியார் பஸ் கட்டணங்களை 20 வீதத்தால் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பிரயாணிகளுக்கு இக்கட்டண உயர்வு பெரும் சுமையாக அமைந்திருந்தாலும் பஸ் உரிமையாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதை விட வேறு வழி தென்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமது புதிய கட்டண அதிகரிப்பின் பிரகாரம் ஆகக்குறைந்த கட்டணமான 4 ரூபா, 8 ரூபாவாக அதிகரிக்கப்படும். புதிய கட்டண அதிகரிப்பின் தேவை பற்றி தேசியபோக்குவரத்து ஆணைக்குழுவுக்கு பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளோம்.

எனினும் இதுகுறித்து எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்படாத நிலையில் கட்டண அதிகரிப்பினை மேற்கொள்ள வேண்டிய நில்ல தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## இலவச மருத்துவ முகாம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகம், கரணவாய்க் கிராம மக்களின் நன்மை கருதி இலவச மருத்துவ முகாமை நடாத்தி இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.


கரணவாய் மகாவித்தியாலயத்தில் லயன்ஸ் கழகத் தலைவர் வி.சிவகுமாரன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை, யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், யாழ்.பல்கலைக் கழக இறுதி ஆண்டு மருத்துவ மாணவர்கள் ஆகியோர் மருத்துவ சேவைகளை வழங்குவார்கள்.

ஜே.ஏ.எஸ்.பெர்ணான்டோ நிறுவனத்தினர் கண்பரிசோதனைகளை மேற்கொள்வார்கள். இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும்.

அத்துடன் குருதி அமுக்கம், சிறுநீர்ப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுமெனவும் லயன்ஸ் கழகச் செயலாளர் ஏ.துரைசிங்கம் அறிவித்திருக்கிறார். (க-52)

# தம்பி
திரை விமர்சனம்



கத்தி - இரத்தம் என்று வெறி பிடித்து திரிபவர்களை அடக்க, அவர்களைப்போல ஆயுதம் எடுப்பது தீர்வு ஆகாது என்பதைத் துணிச்சலாகச் சொல்லும் கதை.

வன்முறை செய்பவர்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருப்பவன் தம்பி வேலுத் தொண்டைமான். ஆயுதம் எடுப்பவர்களுக்கு அனுபவ பாடம் நடத்தி திருத்த வேண்டும் என்பது அவனுடைய கொள்கை. தன் குடும்பத்தை அழித்த எதிரியையும் பழிக்குப் பழி வாங்காமல் மனித நேயத்தால் திருத்த முயற்சி செய்கிறான்.

ஆதரவற்றவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாப்பு அரணாக நிற்கிறான். நேர்மையான அதிகாரியை கொலை செய்யும் ரவுடிகளை திருத்தி வில்லனுக்கு எதிராக சாட்சி சொல்ல வைக்கிறான். இதனால் தம்பியைக் கொலை செய்ய முயற்சி நடக்கிறது. இந்த நிலையில் ஓர் இளம் பெண் அவனைக் காதலிக்கிறாள்.

வில்லன் தூண்டுதலால் ஊரில் வன்முறை வெடிக்கிறது. இதில் சிக்கிய வில்லனின் குழந்தையும், தாயும் உயிருக்குப் போராடுகிறார்கள். அவர்களையும் தம்பி காப்பாற்றுகிறான். வன்முறையைத் தடுக்கும் தம்பியை, ஜெயிலில் இருந்து வரும் ஒரு ரவுடி வெட்டிச் சாய்க்கிறான். முடிவு என்ன என்பது 'கிளைமாக்ஸ்'

தம்பியாக மாதவன். வன்முறையை ஒழிக்க அகிம்சையைக் கடைப்பிடிக்கும் புதுமையான வேடமென்றாலும் அறிவுரையைக் கேட்காதவர்களுக்கு 'நையப்புடை' என்ற பாரதியின் பாடலை தாரக மந்திரமாக ஏற்று பாடம் புகட்டுவது வித்தியாசம்.

தாய், தந்தை, தங்கை மீது காட்டும் பாசம் 'பூவாசம்'. அவர்களைப் பிரிந்து துடிப்பது 'பூகம்பம்'. சுற்றிச் சுற்றி வரும் காதலியை நெருங்க விடாமல் மிரட்டுவது வித்தியாசமான காதல். கத்தி - இரத்தம் என்று வாழ்பவர்களுக்கு அதனால் ஏற்படும் விபரீத முடிவை நேரில் காட்டித் திருத்துவது புதிய கோணம். மாதவனின் கண்களும் நடிக்கின்றன.

தம்பியின் காதலி அர்ச்சனாவாக பூஜா. ஆரம்பத்தில் மாதவனை வெறுப்பதும், அவரைப் பற்றித் தெரிந்ததும் விரும்புவதும் வழக்கமான விஷயம். என்றாலும், பூஜா அந்த உணர்ச்சிகளை அருமையாக பிரதிபலிக்கிறார். நாட்டிய அரங்கில் மாதவன் ரவுடிகளை துரத்தி வந்து அடித்து உதைப்பதைப் பார்த்து நடுங்கும் பூஜா, ரசிகர்களை நிமிர்ந்து பார்க்க



வைக்கிறார். காதல் கனவுகளில் புகுந்து விளையாடியிருக்கிறார். கிடைத்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திப் பெயர் வாங்குகிறார்.

மாதவனின் நண்பனாக வடிவேலு வந்து போகிறார். வில்லனாக பிஜுமேனன் மிரள வைக்கிறார். அவரது கையாளாக வரும் இளவரசு, சண்முகராஜன் இருவரும் கதைக்கு விறுவிறுப்பு ஏற்றுகிறார்கள். மணிவண்ணன் பாத்திரம் இதுவரை தமிழ்த்திரை காணாதது. மனோபாலா, ராஜ்கபூர், சுமித்ரா, வினோத் ராஜ் ஆகியோரும் உள்ளனர்.

வித்யாசாகர் இசையில் 'வித்தக சாகர்' என்பதை காட்டியிருக்கிறார். பாரதி பாடல் மனதில் இடம் பிடிக்கும். பாலசுப்பிரமணியம் ஒளிப்பதிவு 'பலம்'.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் சீமான். அகிம்சைதான் அமைதிக்கு ஆதாரம் என்பதை அழுத்தமாக பதிய வைப்பதில் முழுக் கவனம் செலுத்தியுள்ள இவரது சமூக அக்கறையைப் பாராட்டலாம். 'கத்திக்குக் கத்தி இரத்தத்துக்கு இரத்தம் என்பது பிரச்சினைக்கு தீர்வு ஆகாது' என்று பெரியவர்கள் சொன்னதை இன்றைய இளைஞர்களுக்கு அவர்களுடைய பாணியில் சொல்லி புரட்சி சீமான் ஆகியிருக்கிறார்.

ஒரே ஒரு இளைஞனால் அது சாத்தியமாகுமா? என்ற கேள்வியை எழுப்பி அதற்குப் பதில் சொல்லும் விதம் புதுமை.

***தம்பி - இன்றைய தலைமுறைக்குத் தேவையான தங்கக் கம்பி.***

# எளிமையான பூமிகா



சூர்யா - ஜோதிகா ஜோடியில் 'ஜில்லுன்னு ஒரு காதல்' படத்தின் மூலம் மீண்டும் தமிழுக்கு வந்திருக்கும் 'ரோஜாக் கூட்டம்' பூமிகா தெலுங்கில் நம்பர் ஒன் நாயகியரில் ஒருவர். ஆனாலும் பூமிகா சாமியாரிணி எனச் சொல்லுமளவிற்கு படு சிம்மிளாக இருக்கிறார்.

படப்பிடிப்பின் போது யார் வம்பிற்கும் போகாமல் தானுண்டு, தன் வேலையுண்டு என்று அமைதியாக இருப்பதும், ஒரே டேக்கில் தன் சம்பந்தப்பட்ட சீன்களை ஓ.கே. செய்வதிலும் வல்லவர்.

பூமிகாவின் இந்த எளிமைக்கும், அமைதிக்கும் பின்னணியில் இருப்பவர் அவரது ரகசிய சினேகிதர் தான் என்று ஒரு பேச்சு இருக்கிறது. பக்குவம் தெரிந்தால் பல்லக்கு ஏறலாம்!

# 3 நாள் நடந்த சண்டை

சிவாஜி படப்பிடிப்பு இப்போது ஏவி.எம்.ஸ்டூடியோவில் வேகமாக நடந்து வருகிறது. ரஜனியுடன் பிரபல ஸ்டண்ட் மாஸ்டர் கனல்கண்ணன் மோதிய சண்டைக்காட்சி 3 நாட்களாக படமாக்கப்பட்டது. இளமையான தோற்றத்துடன் 'பில்லா' கெட் - அப்பில் ரஜினி நடித்தார். சண்டைக்காட்சி அமைப்பு: பீட்டர் ஹெய்ன்ஸ்

சிவாஜி படப்பிடிப்புக்காக ஏவி.எம்.மில் பிரமாண்ட மாளிகை, தேவாலயம், டைகவீதி என்று ஒரு பெரிய நகரமே உருவாக்கப்பட்டுள்ளது. படப்பிடிப்பு தளத்தில் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பு காவலாளிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்'
ஜெயம் ரவி - ரிச்சாபலோட்

# நடிப்பைப் பாருங்கள்



நமீதா பார்த்திபனுடன் 'பச்சக்குதிர' என்ற படத்தில் நடித்து வருகிறார். இதிலும் வழக்கம் போல அவருடைய கவர்ச்சி உண்டு. கூடவே அருமையான நடிப்பையும் வெளிப்படுத்தி இருக்கிறாராம்.

அந்தப் படத்தில் அவருக்குப் குப்பத்தில் வசிக்கும் பெண் வேடம். நடிப்பதற்கு அதிக வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அவருடைய நடிப்பை பார்திபனும் பாராட்டி இருக்கிறார். 'இதுவரை வந்த படங்களில் நமீதாவை பார்க்கலாம். ஆனால் இந்தப் படத்தில் நமீதா நடிப்பைப் பார்க்கலாம்' என்று அவர் கூறி இருக்கிறார்.

# சினிமாச் சிதறல்

டைரக்டர் பி.வாசு அவரது மகனை விரைவில் கதாநாயகன் ஆக்கத் திட்டமிட்டுள்ளார்

* * *


அசின் 'மாலை 6 மணிக்கு மேல் நடிப்பது இல்லை' என்ற கொள்கையைத் தற்போது கடைப் பிடித்து வருகிறாராம்.



பாரிஜாதம் :
பாக்யராஜ், பிரதிவிராஜ், பிரகாஷ் ராஜ், சரண்யா

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 91

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'தவமாய் தவமிருந்து' புகழ் நாயகியான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 91**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-91

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..........................

அனுப்புபவரின் முகவரி :-..........................


..........................

..........................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 89

சரியான விடை.





நடிகர் அமிதாப்பச்சன்

### இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 89 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | K.அஸ்வினி<br>கீரிமலை வீதி,<br>சித்தன்கேணி. |
| இரண்டாம் பரிசு | :- | செ.ஆகாஷ்<br>பருத்தித்துறை வீதி,<br>இருபாலைச் சந்தி,<br>இருபாலை. |
| மூன்றாம் பரிசு | :- | S.சரத்<br>G.P.S றோட்,<br>கல்வியங்காடு,<br>யாழ்ப்பாணம். |

### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:

சி.கோவிந்தராஜன், நல்லூர். க.நிலோஜன், நீர்வேலி. வி.சுரேந்திரராஜ், கரவெட்டி சி.சிந்துஜா, மயிலங்காடு. ச.சசீலன், இணுவில். P.S.ராணி, சங்கானை. இ.சபீனா, உரும்பிராய். செ.நவராசா, சுன்னாகம். த.யோகராசா, சாவகச்சேரி. சி.சங்கீதா + சம்பூரணீ, வட்டுக்கோட்டை. க.குருநாதன், கோண்டாவில். லோ.கார்த்திகா, கந்தர்மடம். ம.சுரேகா, நாவலர் வீதி. நா.நித்தியானந்தன், பிறவுண் வீதி.

# மிகப்பெரிய இரத்த வங்கி

உலகிலேயே மிகப்பெரிய இரத்த வங்கி அமெரிக்கச் செஞ்சிலுவைச் சங்கம்தான். கிட்டத்தட்ட 4 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் இரத்ததானம் செய்துள்ளனர். அமெரிக்கச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் கிட்டத்தட்ட 3 ஆயிரம் மருத்துவமனைகள் தொடர்புகொண்டுள்ளன. மேலும் அமெரிக்கா முழுவதும் இதன் தொடர்பு மையங்கள் உள்ளன.

மேலும் இந்த அமைப்பு நிர்வாக வசதிக்காக 38 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இரத்ததானத்தில் சாதனைகள் பல படைத்துள்ளதால் அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

# ரொக்கெட் பைக்

ரொக்கெட் என்றாலே நம் நினைவிற்கு வருவது விண்ணைக் கிழித்துக்கொண்டு செல்லும் கருவிதான். ஆனால் விஞ்ஞானிகள் இரு சக்கர வாகனத்தை ரொக்கெட்டாக சாலையிலேயே செல்லும் விதமாகத் தயாரித்துள்ளனர். நம்ப முடியவில்லையா? ஆம்! பிக்கென்சன் என்ற ரொக்கெட் விஞ்ஞானி நவீன ரொக்கெட் பைக்கைக் கண்டுபிடித்துள்ளார்.

ஓரியன் ப்ரொபல்ஸன் ரொக்கெட் வடிவமைக்கும் நிறுவனத்தின் தலைவரான இவர் தன்னுடைய சக ஆராய்ச்சியாளர்களுடன் இந்த 35 பவுண்டு (சுமார் 16



கிலோ) எடையுள்ள ரொக்கெட் இன்ஜினை இரு சக்கர பைச் கில் பொருத்தி வடிவமைத்துள்ளார். இவர் மற்றொரு 90 கிலோ எடையுள்ள ரொக்கெட் இன்ஜினுடன் பைக்கை வடிவமைத்துள்ளார். இது 5 வினாடிகளில் 60 கிலோமீற்றர் தூரத்தை எட்டிவிடும்.

சாதாரணமாக ரோட்டில் 80 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் பைக்கையே நாம் பார்த்தால் காதைப் பொத்திக்கொண்டு நகர்ந்து விடுகிறோம். 5 வினாடிகளில் 60 கிலோமீற்றரைத் தொடும் என்றால் பிரம்மிப்பாகத்தான் இருக்கும். இந்த பைக் மற்ற ரொக்கெட்டைப் போல கலப்பின ரொக்கெட் தொழில்நுட்பத்தில்தான் தயாரிக்கப்பட்டுள்ளது.

அமுக்கு பொத்தானின் மூலம் ரொக்கெட் இன்ஜினை உசுப்பிவிட முடிகிறது. இடது கைப்பிடியிலுள்ள பொத்தனை அழுத்துவதன் மூலம் பட்டரியிலிருந்து இன்ஜினை இயக்க மின்சாரம் செலுத்தப்படுகிறது. இதன் மூலம் எரிசக்தி தூண்டப்படுகிறது. வலது கைப்பிடி பொத்தான் நைட்ரஸ் ஆக்சைடை வெளிப்படுத்துகிறது.

**வாழ்வின் இன்பத்துக்கு,**
**அழகைவிட அன்பே**
**முக்கியம்**
*– கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை*

# வேகமான மின்சாரப் படகு

தண்ணீரில் நீந்திச் செல்லும் படகுகளில் நீங்கள் படத்தில் பார்க்கும் இயந்திரம் அதி வேகமாகச் செல்லக்கூடியது.


இது மணிக்கு 480 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியது. இதனை 'பேட்ரிக் ரம்மர்



பீல்' என்ற ஓட்டுனர் மணிக்கு 395.821 கிலோ மீற்றார் வேகத்தில் ஓட்டிச் சாதனை படைத்தார்.

இந்தச் சாதனைப் படகில் 200 குதிரை திறன் சக்திகொண்ட இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-95




*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 95**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப்பெயர்* :- ..........................................

*முகவரி* :- ..........................................

..........................................

..........................................

*இங்கே வெட்டுக* ------------------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)எதிர்காலத்தில் நிகழவிருப்பதை முன்கூட்டியே தெரிவிப்பவர். (4)நிறங்களிலொன்று. (5)வானில் மழைக்கான அறிகுறி. (6)வானில் இப்பறவை வட்டமிட்டாலும் பார்வை பூமியில். (7)வரிசை - இப்படியுமழைப்பர். (9)நாற்சந்தி.

### மேலிருந்து கீழ்

(1)தீவு - இப்படியும் கூறுவர். (2)பெண்கள் எதை இழந்தாலும் இதை இழக்கக் கூடாது என்பர். (3)மானிடரால் மட்டுமே இதனைச் செய்ய முடியும். (5) வண்டு - இப்படியுமழைப்பர். (6)பூமி இது போன்றது என்பர். (8)சுழச்சி - இதனைக் குறிக்கும் (கீமே).

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 93 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | | |
|---|---|---|---|
| 1.அடிவானம் | 4.யாழ் | 5.மட்டம் | 6.அகம் |
| 7.தரை | 9.தோணி | 11.குழி | 12.பழசு |

**மேலிருந்து கீழ்**

| | | | |
|---|---|---|---|
| 1.அசமந்தம் | 2.வாட்டம் | 3.பாழ் | 4.யாசகம் |
| 8.பிணி | 9.தோழி | 10.பசு | |

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | இ.அருந்தவநாயகம்<br>கண்டி வீதி,<br>சாவகச்சேரி. |
| இரண்டாம் பரிசு | :- | வி.ஆர்.லோகன்<br>கொட்டடி,<br>யாழ்ப்பாணம். |
| மூன்றாம் பரிசு | :- | T.S. சயந்தன்<br>அரசடி ஒழுங்கை,<br>வட்டு தெற்கு,<br>வட்டுக்கோட்டை. |

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறுவோரின் பெயர் விபரம்:

இ.ஏரம்பமூர்த்தி,கோப்பாய். ஞா.இராஜேஜதயன், கோப்பாய். வ.மன்னர் அன்ரனி, குருநகர். கே.அரசேஸ்வரன், நல்லூர். க.குருநாதன், கோண்டாவில். கு.தயாமினி, இணுவில்.

# அயல் கிரகவாசிகள்

பூமியில் மனிதர்கள் வசிப்பது போல விண்வெளியில் உள்ள பிற கிரகங்களில் மனிதர்கள் அல்லது மனிதர்கள் போன்ற அயல் கிரகவாசிகள் வசிக்கலாம் என்ற கருத்து நிலவி வருகிறது. ஏலியன்ஸ் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் அயல் கிரகவாசிகள் பற்றிய ஆராய்ச்சிகள் தீவிரமாக நடந்து வரும் நேரத்தில் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் புதிய தகவல் ஒன்றை தெரிவித்துள்ளனர். அதாவது பூமியில் இருந்து 26 ஒளி ஆண்டுகள் தூரத்தில் மஞ்சள் – ஆரஞ்சு நிறம் கலந்த சூரியன் போன்ற ஒரு கிரகம் உள்ளது. இதற்கு 'சாரா' என்று பெயரிட்டுள்ளனர். இந்தக் கிரகத்தில் புத்திசாலித்தனம் மிக்க அயல் கிரக வாசிகள் வசிக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

# ஒன்றாக இணைந்த இரு துருவங்கள் வைகோ - திருமாவளவன் சந்திப்பு



விடுதலைச் சிறத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் அண்மையில் ம.தி.மு.க அலுவலகத்தில் வைகோவை சந்தித்தார். இச்சந்திப்பையடுத்து வைகோ. பத்திரிகையாளர்களுக்களித்த செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழக அரசியலின் திசைவழியை தீர்மானிக்கும் ஆற்றல்மிக்க தலைவராக வைகோ திகழ்கிறார். எந்தத் திசையை நோக்கி இந்த புயல் நகர்கிறது என்று தமிழக அரசியல் மட்டுமன்றி இந்திய அரசியலே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இந்தப் புயல் போயஸ் தோட்டத்தை நோக்கி நகர்ந்தது.

தமிழக அரசியலின் அச்சாக செயல்பட்டுக்கொண்டிருப்பவர் வைகோ. ஒருமித்த கருத்து, ஒருமித்த பாதை, ஒருமித்த நோக்கம் இருப்பதால் எங்களது கூட்டணி இயற்கையான கூட்டணி. அ.தி.மு.க 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்கும். தமிழர் நலன் காக்கும் கூட்டணியாக இது இருக்கும் எனத் திருமாவளவன் கூறினார்.

பெரியார், அம்பேத்கர் நிலைநாட்டிய கொள்கையை பாதுகாக்க தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு தன்னலத்திற்கு கடுகளவும் இடம்கொடுக்காத போராளி திருமாவளவன். தமிழக அரசியலின் மிக முக்கியமான காலகட்டத்தில் நாங்கள் இருவரும் ஒரே கூட்டணியில் கரம் கோர்த்துள்ளோம். இந்தக் கூட்டணி உன்னதமான வெற்றியைப் பெறும். அ.தி.மு.க தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். அதற்கு அரணாக ம.தி.மு.கவும் விடுதலைச் சிறுத்தைகளும் இருப்பார்கள் என்று வைகோ கூறினார். (து)

# அ.தி.மு.க கூட்டணியில் சேர விஜயகாந்த் நிபந்தனை



ஆட்சியில் பங்கு கொடுக்க சம்மதித்தால் அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர தயார் என்று விஜயகாந்த் கூறினார்.

கூட்டணி வேறு, கூட்டணி ஆட்சி வேறு. அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்தால் ஆட்சியில் சரிபாதிப்பங்கு வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

விஜயகாந்த் தொடங்கியுள்ள தேசிய முற்போக்கு திராவிட கழக கட்சி நடைபெறவுள்ள தமிழக சட்டசபை தேர்தலில் தனித்து போட்டியிடுகிறது. இதற்காக விஜயகாந்த் கடந்த 2 மாதங்களாக தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அவரது கட்சிக்கு ஆதரவு திரட்டி வருகிறார்.

திருப்பரங்குன்றம் எனக்கு சொந்த ஊர். பழக்கமான ஊர். சிறிய வயதில் அடிக்கடி வந்து முருகப்பெருமானை தரிசனம் செய்துள்ளேன். மலையில் உள்ள தர்காவிற்கு சென்று வழிபட்டுள்ளேன். நன்கு பழக்கமான ஊர் என்பதால் திருப்பரங்குன்றத்தில் மாநாடு நடத்தினேன். மழை இல்லை என்று கூறினார்கள். மாநாடு நடத்திய பிறகு மழை பெய்தது. கண்மாய்கள் நிரம்பின. மழை பெய்ததை வைத்து எனக்கு நல்ல சகுனம் உள்ளது. இதை நான் சொல்லவில்லை. பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

எம்.ஜி.ஆர். தனது கையில் காசை வைத்துக்கொண்டு கட்சி ஆரம்பித்தார். நானும் உழைத்த பணத்தை வைத்து கட்சி தொடங்கியுள்ளேன். சிலர் பணத்தை சம்பாதித்து விட்டு கட்சி நடத்துகிறார்கள். காமராஜர் ஆட்சி கொண்டு வருவோம் என்று சொல்கிறார்கள். ஆனால் சீட்டுக்காக கையை கட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த தேர்தலில் தேசிய முற்போக்கு திராவிடக்கழகம் வெற்றி பெற சந்தர்ப்பம் கொடுங்கள். நான் ஆட்சிக்கு வந்தால் லஞ்சத்தை ஒழிப்பேன். என்னைப் பார்த்து இந்த ரமணா எப்படி லஞ்சத்தை ஒழிக்க முடியும் என்று கேலியாக பேசுகிறார்கள். அ.தி.மு.க, தி.மு.கவிற்கு ஓட்டு போடுவதை மக்கள் நிறுத்திக்கொண்டாலே 50 சதவீதம் லஞ்சம், ஊழல் ஒழிந்துவிடும். அரசியல்வாதிகள் லஞ்சம் வாங்குவதால் அதிகாரிகளும் லஞ்சம் வாங்குகிறார்கள்.

ஏழை, எளியோர்கள் சாப்பிடக்கூடிய வாழைப்பழங்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்தால் அதிலும் லஞ்சம் வாங்குகிறார்கள். என்னால் லஞ்சத்தை முழுமையாக ஒழிக்க முடியும்.

நல்ல நிலத்திற்கு விளைச்சல் முக்கியம். நல்ல ஆட்சிக்கு நிம்மதி வேண்டும். இப்போது மக்களுக்கு நிம்மதி கிடைக்க நல்ல ஆட்சி தர தேசிய முற்போக்கு திராவிட கழகத்தால் முடியும்.

தேசிய முற்போக்கு திராவிட கழகம் ஆட்சிக்கு வந்தால் தரமான, நியாயமான விலையில் ரேஷன் பொருட்கள் வீடு தேடி வரும். மக்களுக்கு கிடைக்கவேண்டிய ரேஷன் பொருட்களை கடத்தி விற்பனை செய்யவிட மாட்டேன். மாவட்டம் தோறும் முதியோர் இல்லங்கள் திறக்கப்படும். என் தாய் தந்தை போல முதியோர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

தற்போது தேர்தல் வாக்குறுதியை முழுமையாக சொல்லவில்லை. ஏப்ரல் மாதம் வரும்போது முழுத் தேர்தல் அறிக்கை வெளியிடுவேன் எனத் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்தார். (து)

இந்திய வலம்

# மத்திய அரசின் சாதனைகளை முன்னிறுத்தித் தேர்தல் பிரசாரம்

## சட்டசபைத் தேர்தலில்

(சென்னை)

சட்டப்பேரவைத் தேர்தலில் மத்திய அரசின் சாதனைகளை முன்னிறுத்தி பிரசாரம் செய்வோம் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் எம்.கிருஷ்ணசாமி கூறினார்.

தினமணி நாளிதழுக்கு அளித்த சிறப்புப் போட்டியில் பேரவைத் தேர்தலில் எதை முன்னிலைப்படுத்தி காங்கிரஸ் பிரசாரம் செய்யும் எனக் கேட்டபோது, அ.தி.மு.க ஆட்சியின் மக்கள் விரோத செயல்களையும் குறைகளையும் மக்களிடம் பிரசாரம் செய்வோம். மத்திய அரசின் சாதனைகளையும் தமிழகத்துக்கு கிடைத்த நன்மைகள் பற்றியும் பிரசாரம் செய்வோம். சேது சமுத்திரத் திட்டம், தொலைத் தொடர்புத் துறை, சுகாதாரத் துறையில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

கடந்த மூன்றாண்டுகளாக மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு நிதிநிலை அறிக்கையில் பல திட்டங்களை அறிவித்துள்ளது என்றார்.

அ.தி.மு.கவுக்கு எதிரான அலை வீசவில்லையே என்று கேட்டபோது, அ.தி.மு.கவுக்கு எதிராக அலை வீசவில்லைதான். ஆனால் அரசு ஊழியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் அ.தி.மு.க ஆட்சியில் பாதிக்கப்பட்டுள்ளனர். அதை அவர்கள் இன்னும் மறக்கவில்லை என்றார்.

கூட்டணியில் இருந்து வைகோ விலகியதால் பாதிப்பு இல்லையா? என்ற கேள்விக்கு,

கூட்டணியில் இருந்து வைகோ விலகியதால் எங்களுக்கு பாதிப்பு எதுவும் இல்லை. காங்கிரஸ் கட்சி எந்தக் கூட்டணியில் இருக்கிறதோ அந்தக் கூட்டணி தான் வெற்றிபெறும். இது கடந்தகால வரலாறு என விடையளித்தார்.


தி.மு.கவுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்காவிடில் கூட்டணி ஆட்சியில் பங்கு கேட்பீர்களா? என்று கேட்டதற்கு, தி.மு.கவுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கும். அப்படிக் கிடைக்காமல் போனால் கூட்டணி ஆட்சியில் பங்கு வேண்டுமா? இல்லையா? என்பதை காங்கிரஸ் மேலிடம்தான் முடிவு செய்யும் எனத் தெரிவித் தார்.

காங்கிரஸ் சார்பில் ஏற்கனவே தேர்தல் பணி தொடங்கிவிட்டது. டில்லியில் புதன்கிழமை தேர்தல் பணிக்குழுக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் காங்கிரஸ் போட்டியி டும் தொகுதிகள் குறித்து ஆலோசிக்கப் படும். அதன் பின்னர் 2 அல்லது 3 தினங் களில் காங்கிரஸ் கட்சி போட்டியிட விரும் பும் தொகுதிகள் தரப்படும்.

தேர்தல் பிரசாரத்துக்காக பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மூத்த தலைவர்கள் தமிழகம் வர உள்ளனர். தேர்தலில் இளைஞர்களுக்கு முன்னுரிமை தரப்படும். கட்சிக்கு விசுவாசியாக இருப்பவர்களுக்கும் வாய்ப்பு தரப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

## சட்டசபைத் தேர்தலில்

# தொடர் பிரசாரம் செய்ய நடிகர் சரத்குமார் மறுப்பு



(சென்னை)

நடைபெற இருக்கும் சட்டசபைத் தேர்தலில் முன்பு போல தொடர் பிரசாரம் செய்யமாட்டேன் என்று நடிகர் சரத்குமார் அறிவித்துள்ளார்.

நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசியல் பொறுப்புள்ள பதவி வேண்டும் என்ற என் ஆதங்கத்தை நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

சாதிக்கு ஒரு கட்சி என்ற சூழ்நிலையில் அதன் அடிப்படையில் பிரதிநிதித்துவம் என்று வரும் போது ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் நாமும் ஒரு கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்று சிந்திக்கிற அளவுக்கு சூழ்நிலை வந்துள்ளது. அதே கட்டாயம் நாடார் சமுதாயத்துக்கும் வந்துள்ளது.

சாதி, மதம் கூடாது என்று கருதுபவன் நான். அதேசமயத்தில் சமுதாய உணர்வு எனக்கு இருக்கிறது. அப்படி நினைப்பதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

வருகிற சட்டசபைத் தேர்தலில் முன்பு போல இடைவிடாத பிரசாரம் செய்வீர்களா? என அவரிடம் செய்தியாளர்கள் கேட்ட போது,

முன்பு போல் தொடர்ந்து 15 நாட்கள் அல்லது 20 நாட்கள் பிரசாரம் செய்ய முடியாது. எல்லா ஊர்களுக்கும் போக முடியாது. அதற்கு நேரமும் இல்லை. காலமும் இல்லை. குறிப்பிட்ட தொகுதிகளில் மட்டும் பிரசாரம் செய்வேன் எனத் தெரிவித்தார். (து)

# ஜெயலலிதா, அன்பழகனுக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ்

(சென்னை)

மலைப்பாறைகளில் தேர்தல் விளம்பரம், மதப் பிரசார விளம்பரங்களை எழுதத் தடைவிதிக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கு குறித்து• ஏப்ரல் 5ஆம் திகதிக்குள் பதில் அளிக்குமாறு அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா, தி.மு.க பொதுச்செயலாளர் அன்பழகன் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் விலங்குகள் பாதுகாப்பு அமைப்பின் நிர்வாகியும் வழக்கறிஞருமான ஜி.ராஜேந்திரன் தனது ரிட் மனுவில் கூறியிருப்பதாவது,

நான் சமீபத்தில், மதுரையில் இருந்து திருச்சி, செங்கல்பட்டு வழியாக சென்னை வந்தேன். சாலை ஓரங்களில் உள்ள மலைப் பாறைகளில் அரசியல் விளம்பரங்களும், மதப் பிரசார விளம்பரங்களும் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தேன். மலைகளில் வண்ணம் தீட்டி இயற்கை அழகைக் கெடுக்கக் கூடாது என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. இமயமலையில் இயற்கையாக வளர்ந்துள்ள புதர்களையும், செடிகளையும் அகற்றக்கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. எனவே மலைகளில் உள்ள பாறைகளில் வண்ணம் தீட்டி விளம்பரம் செய்வதையும் அங்கு கொடிகள் பொருத்துவதையும், சுவரொட்டிகள் ஒட்டுவதையும் மாநில அரசுகள் தடுக்க வேண்டும்.

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் மதப் பிரசார விளம்பரங்கள் எழுதப்பட்டுள்ளன. மலைப்பாறைகள் , காட்டு மரங்கள் மற்றும் நெடுஞ்சாலையின் மையப்பகுதியில் அரசியல் விளம்பரமோ, மத விளம்பரமோ செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த இடங்களில் உள்ள விளம்பரங்களை அகற்றாதவர்கள் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று தலைமைத் தேர்தல் ஆணையர் உத்தரவிட வேண்டும் என்றும் அம் மனுவில் கூறப்பட்டுள்ளது. (து)



தேர்தல் ஆணை யர் நவீன் சௌலாவை பதவி நீக்கம் செய்யக் கோரி ஜனாதிபதியை சந்தித்து விட்டு வருகிறார்கள் பி.ஜே.பி. தலைவர்கள்.



# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை



77 மீள்பார்வை

அதன் பின் பிரான்ஸ் அரசு டெல்லியுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். டெல்லியில் என்னைப் பற்றி கூறுவதற்கே ஆளில்லை. அதனால் அவர்களும் கழட்டி விட்டு விட்டார்கள். இந்த விஷயம் எப்படியோ பிரான்சில் உள்ள இந்தியக் கலாசார மையத்திற்குத் தெரிந்துள்ளது. அங்கே பாண்டிச்சேரியைச் சேர்ந்த எனது இரண்டு நண்பர்கள் பஸ்கால், ஜமால் ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் பிரஞ்சு அரசாங்க அதிகாரிகளை அணுகி அவர்கள் கேட்ட விபரத்தைத் தந்திருக்கிறார்கள்.

அதன்பின் பிரஞ்சு கவர்மெண்ட் முறைப்படி எனக்குக் கடிதம் எழுதினார்கள். உங்களுக்குச் செவாலியே பட்டம் கொடுத்துள்ளோம். மிக உயர்ந்த பட்டம் இது. நீங்கள் பிரான்ஸ் நாட்டிற்கு வந்து அதை வாங்கிச் செல்லுங்கள் என்று எழுதியிருந்தார்கள்.

இதை வாங்குவதற்காக பிரான்ஸ் செல்லவேண்டுமா? என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இதற்கிடையில் சிவாஜிக்கு செவாலியே அவார்டு கொடுத்திருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வந்துவிட்டது. செவாலியே அவார்டு என்னவென்று நம்மூரில் பலருக்குத் தெரியாது.



'பத்மஸ்ரீ' விருது...

நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களின் மகள் ராதிகாவிற்கு என் மீது பிரியமும் மரியாதையும் உண்டு. நானும் அவர்களுடைய தந்தையும் நெருங்கிய நண்பர்கள் என்பது அவருக்குத் தெரியும். ராதிகாவின் கணவர் ஐரோப்பிய நாட்டவர். அவருக்கு செவாலியே விருதைப் பற்றி தெரிந்துள்ளது. அவர் இந்த செவாலியே அவார்டு சுலபமாக கிடைக்காதே! அது நமது சிவாஜி கணேசனுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் இங்கே நீங்களெல்லாம் அதைப் பற்றி எதுவும் பேசாமல் இருக்கிறீர்களே என்று ராதிகாவிடம் கூறியிருக்கிறார்.

உடனே ராதிகா அவர்கள் கமலஹாசன், ரஜினிகாந்த், விஜயகாந்த் போன்ற நடிகர்களையெல்லாம் கூப்பிட்டு சிவாஜி அண்ணனுக்கு உலகமே போற்றும் செவாலியே அவார்டு கிடைத்துள்ளது. அதை ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதனால் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தயாரிப்பாளர்களான ஏ.வி.எம்.சரவணன், கே.ஆர்.ஜி.போன்றவர்களிடம் இது பற்றி பேசியிருக்கிறார்கள். திரையுலகத்தினரும் கலைஞர்களும் ஒன்றுசேர்ந்து ஒரு பெரிய விழா நடத்த வேண்டும் என்று முடிவு செய்தார்கள். தமிழக அரசும் அதற்கு ஒத்துழைத்தது.

இரண்டு இலட்சம் பேரைக் கூப்பிட்டு மிகப் பெரிய விழா நடத்தி எனக்குச் செவாலியே அவார்டைக் கொடுத்தார்கள். அப்போதைய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் விருது வழங்கும் விழாவிற்கு தலைமை வகித்தார்கள்.

ஒரு நடிகனுக்குத் தரப்படும் உயர்ந்த விருது என்றால் எல்லா நடிகர்களுக்கும் பெருமை தானே. பிரான்ஸிலிருந்து ஒரு தூதுவர் இந்த அவார்டுக்கான மெடல் சர்டிபிகேட்போன்றவைகளை எடுத்து வந்து டெல்லியிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தில் கொடுத்திருக்கிறார். டெல்லியிலிருந்த பிரான்ஸ் தூதுவர் மாண்புமிகு பிலிப்பெத்தி சென்னைக்கு வந்து எனக்கு அந்த விருதை வழங்கினார். இந்த விழாவில் முதல்வர் ஜெயலலிதாவும் முக்கியமான நடிகர், நடிகைகளும், கலையுலக பெருமக்களும், ஏராளமான பிரமுகர்களும் வந்திருந்து என்னைப் பாராட்டிப் பெருமைப்படுத்தினார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன்.

டி.எஸ்.என்: இந்திய நாட்டில் கலைஞர்களுக்கு வழங்கப் படும் விருதுகளில் ''தாதா சாகேப் பால்கே'' விருது மிகவும் மரியாதைக்குரியது. ஆனால் அதைச் சரியான கால கட்டத்தில் வழங்காமல் மிகத் தாமதமாக உங்களுக்கு வழங்கினார்கள் அது பற்றி...

சிவாஜி: இந்த பால்கே அவார்டு என்பது கலையுலகத்தில் சிறந்து விளங்குபவர்களுக்குக் கொடுக்கப்படும் கௌரவம் மிக்க விருது. தாதா சாகேப் பால்கே என்ற மிகப் பிரசித்தி பெற்ற கலைஞர் ஒருவர் பம்பாயில் இருந்தார். நாடக திரைப்பட உலகிற்கு மிகச் சிறந்த சேவை செய்தவர் அவர். அவர் பெயரால் ஏற்பட்ட விருது இது.

இந்த பால்கே விருது நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே எனக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று பத்திரிகைகளில் எழுதினார்கள். கலைஞர்கள் பேசினார்கள். பெரிய மனிதர்களெல்லாம் பல வருடங்கள் முன்பே இந்த விருது சிவாஜிக்கு ஏன் கொடுக்கப்பட வில்லை? என்று கேட்டிருக்கிறார்கள்.



'பத்மபூஷண்' விருது...

மதிப்பிற்குரிய லதா மங்கேஷ்கரே இதுபற்றி கலையுலகப் பெரியவர்களிடம் பேசியிருக்கிறார்கள். எனக்குத் தர வேண்டுமென்று முடிவு எடுத்துவிட்டார்கள். ஆனால் தாமதமாக சமீபத்தில் தான் கொடுத்தார்கள். Better late than never என்று சொல்வார்களே அது போலத் தான். இந்த அவார்டை 1997இல் அப்போதைய இந்திய ஜனாதி பதி மாண்புமிகு சங் கர்தயாள் சர்மா அவர்கள் எனக்கு அளித்தார்கள். திரைப் படக் கலைஞர்களும் பிரமுகர்களும் வந்திருந்து வாழ்த்தினார்கள். பத்திரிகைகள் மூலமும் தொலைக் காட்சி மூலமும் சிறப்பாகப் பாராட்டினார்கள். மற்ற மாநிலங்களிலும் நான் பால்கே விருது பெற்றதற்காக பாராட்டு விழா நடத்தினார்கள். முதலில் கர்நாடகாவில் என்னை அழைத்தார்கள். என்னால் போக முடியவில்லை. அவர்கள் சென்னை வந்து அந்தப் பாராட்டு விழாவை நடத்தினார்கள். அதேபோல் ஆந்திராவிலும் சிலோனிலும் மற்றும் கேரளாவிலும் என்னை அழைத்து விழா நடத்தினார்கள். கேரளாவில் எல்லா நடிகர்களும் மேடையில் நின்றார்கள். அரசியல் வாதிகளும்கூட என்னைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். எனக்கு மட்டும் ஒரே ஒரு நாற்காலி போட்டிருந்தார்கள். என்னை மட்டும் உட்கார வைத்து நடிகர்கள், திரைப்படக் கலைஞர்கள், முக்கிய பிரமுகர்கள் எல்லோரும் எழுந்துநின்று கைதட்டி மரியாதை கொடுத்தார்கள். விருது பெற்ற போது கிடைத்த மகிழ்ச்சியை விட பன் மடங்கு மகிழ்ச்சியை அப்போது நான் அடைந்தேன். இந்தப் பாராட்டுகளுக்காக எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (தொடரும்)



## தவக்கால சிந்தனை

### 'ஆண்டவர் இரக்கமும் அன்பும் கொண்டவர்"

மிக உயர்ந்த பட்டாடை மகன் என்ற உரிமை காட்டும் மகத்தான பொன் மோதிரம். குடும்பத்தின் செல்ல உறுப்பினன் என்று சொல்ல சுதந்திலக்காலணிகள் கொழுத்த கன்றோடு விருந்துணவு - தந்தையின் மகிழ்வுக்கு எல்லை இல்லை! திரும்பி வந்த மகனின் மன்னிப்பு வார்த்தைகள் அரங்கேறப்படாமல் விருந்து தொடங்குகிறது. இது தந்தையின் மன்னிக்கும் வேகத்தையும் பாய்ந்தோடும் அவரது நிபந்தனையற்ற அன்பையும் காட்டுகிறது. தந்தையின் இல்லம் திரும்பும் இனிமையான அனுபவத்தை மீண்டும் இத்தவக்காலத்தில் பெறுவோமா? தந்தையின் இல்லத்தில் தவறாது இணைந்திருந்தால் நல்லதுதான். ஆனால் மிக உன்னிப்பாக கவனிக்க வேண்டியது நமக்குள் மூத்த மகனின் மனகோபம் நுழைந்திருக்கிறதா? என்பதைத்தான்! வீட்டிலே நிகழும் விருந்தில் பங்கெடுக்க மனமில்லாது. சகோதர உணர்வுக்கு இதயக் கதவை இழுத்துப்பூட்டி கிடப்பது எத்தனை இறுக்கமானது தந்தையின் தடையில்லா அன்பை கேட்டு கேவலப்படுத்துவது எத்துணை மதியீனம்!

காவலன்

## கடைகளின் விபரங்கள் திரட்டும் இராணுவத்தினர்

(பொன்னாலை)

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள சங்கானை சித்தங்கேணி, சுழிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கடைகளின் விபரங்களை இராணுவத்தினர் திரட்டி வருகின்றனர். அதற்கெனத் தயாரிக்கப்பட்ட படிவம் ஒன்றினைக் கொடுத்து அதனை பூரணப்படுத்தி பெற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. கடை உரிமையாளர்களின் பெயர், அங்கு பணிபுரிபவர்கள் உட்பட பல தகவல்கள் பெறப்படுவதாகக் கூறப்பட்டது. (ச-49)

## அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனத்தை வழி மறித்த மாமுனை மக்கள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மாமுனைப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் உள்ள மக்கள் நேற்று முன்தினம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களை வழிமறித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாமுனையில் 172 நிரந்தர வீடுகள் அமைத்துத் தருவதாக உறுதியளித்த அவர்கள் இதுவரையும் அதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் குற்றஞ் சாட்டினர்.

அப் பகுதிக்கு வாகனத்தில் சென்ற அவுஸ்திரேலிய செஞ்சிலுவை சங்கத்தினர் சுனாமித்திட்டப் பணிப்பாளர் றொபேட்டை சுற்றிவளைத்த மக்கள் அவரை மேலே செல்ல அனுமதிக்கவில்லை. சுமார் மூன்று மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் 10 நாட்களுக்குள் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகளை மேற்கொள்வதாக உறுதியளித்த பின்னரே செல்ல அனுமதிக்கப்பட்டார். (ச-23)

## நாயன்மார்க்கட்டில் இலவச தையல் பயிற்சி

(கோப்பாய்)

நாயன்மார்க்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலைய மாதர் சங்கத்தினர் சுயதொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு இலவச தையல் பயிற்சிநெறி ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளனர்.

இப் பயிற்சி நெறியில் சேர விரும்பும் மகளிர் பயிற்சிக்கான விண்ணப்பப்படிவங்களை நிலையச் செயலாளரிடம் பெற்று எதிர்வரும் 25ஆம் திகதிக்கிடையில் நேரில் கையளிக்குமாறு நிலையச் செயலாளர் வ.அன்பழகன் கேட்டுள்ளார். (து-134)

## கூட்டமைப்பினர் - தமிழ்ச்செல்வன் சந்திப்பு நாளை இடம்பெறும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நாளை ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஜெனீவாப் பேச்சுக்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிலைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இச் சந்திப்பில் விவாதிக்கப்படவுள்ளன. (க)

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய நவதளகோபுரப் பணிகள் மீண்டும் ஆரம்பம்

(பொன்னாலை)

ஈழத்தின் தொன்மை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய நவதள இராஜகோபுரப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றனஎன்று கோபுர நிர்மாணப் பணியின் பிரதம சிற்பாச்சாரியாரான அராலி மத்தியைச் சேர்ந்த வே.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழகத்திலிருந்து வருகை தந்த சிற்பிகளே இராஜகோபுரத்தில் சிலைகளை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல வருடங்களுக்கு முன்பு அடித்தளம் இட்டு ஆரம்பிக்கப்பட்ட பொன்னாலை நவதள இராஜகோபுர நிர்மாணப்பணிகள் நாட்டில் ஏற்பட்ட யுத்த நெருக்கடிகள் காரணமாக முற்றுபெறாது இருந்து வந்தன.

தற்போது நாட்டில் நிலவும் ஓரளவு சுமுகமான சூழ்நிலையை அடுத்து இக் கோபுர நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் ஆலயக் கோபுர நிர்மாணப் பணிக்கு பல இலட்சம் ரூபா தேவையாக இருப்பதால் அடியார்கள் பண உதவிகளை தந்துதவினால் கோபுரப் பணிகளை மிக விரைவாக முற்றுப் பெற வைக்கமுடியும் என்றும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (க-49)

## இலவச மருத்துவம்

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேசத்திலுள்ள தீவக அரிமாக் கழகத்தினால் நடத்தப்படும் இலவச மருத்துவ முகாம் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணி வரை யாழ். வேலணை மேற்கு புளியங்கூடல் நடராசா வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

இதில் இலவச கண்ணாடி வழங்கல், மருந்து வழங்கல் மற்றும் நீரிழிவுப் பரிசோதனை, பொது மருத்துவம், முதியவர்களை கௌரவித்தல், கற்றல் உபகரணங்கள், நுளம்பு வலைகள் ஆகியன வழங்கப்படவுள்ளன. (க-72)

## அவசரமாக தரை இறங்கிய விமானம்

ஹவ்வாயிலிருந்து மாலைதீவு நோக்கிப் பறந்த விமானம் நேற்று முன்தினம் அவசரமாக கட்டு நாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. விமானத்தில் புகைகிளம்பியதையடுத்துவிமானம் அவசரமாகத் தரையிறக்கப் பட்டதாக கட்டு நாயக்க விமான நிலைய கடமையாளர் தெரிவித்தார்.

விமானத்தில் இருந்த அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த 119பேர் விமானநிலையத்தில் உள்ள ஹோட்டலில்தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். அவசரமாகத்தரையிறக்கப்பட்டவிமானத்தை விமானநிலைய பொறியியலாளர்கள் பரிசோதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சு-7)

## தடகளப் போட்டி

வலிவடக்கு தெல்லிப்பழை பிதேச செயலகப் பிரிவு 2006ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டி நாளைஞாயிற்றுக்கிழமைபி.ப.1.30 மணிக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றொகான் இராஜசிங்கம், சுன்னாகம் கொமஷல் வங்கிமுகாமையாளர் ஏ.ஆர். குலேந்திரன், காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்கணேசமூர்த்திஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (சு-132,133)

# ஓவியத்துறையில் சாதனை படைத்த 'ஆட்டீஸ்ற் மணியம்'

யாழ்ப்பாணம் நல்லூரில் 1923 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 21ஆம்திகதி (1923-09-21) பெரிய தம்பி விசாலாட்சி தம்பதிகளுக்கு மூத்த மகனாக பிறந்தார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் தனது உயர்தரக்கல்வியை நிறைவுசெய்து 2ஆம் உலகப் போரின்போது கடற்படையில் பணியாற்றினார்.

ஓவியத்தில் நாட்டம் உள்ள. இவர் அரசசேவையினைத் துறந்து முழு நேர ஓவியரானார், மகேந்திரா திரையரங்கின் ஒப்பிறேற்றராகவும், ஓவியராகவும் பணி புரிந்தார். பின்னர் ராணி திரையரங்கிலும் பணிபுரிந்தார்.

இவர் ஒரு முறை வரைந்த ஓவியத்தை இம்சித்த முஸ்லிம் நண்பரின் சவாலை முறியடிக்க 1960 இல் இந்தியா சென்று மேலதிக தொழில் நுட்பங்களை ''திருராமஜெயம்'' என்பவரிடம் அறிந்து. தெய்வ உருவங்கள், காட்சிகள், திரைப்படக் காட்சிகளின் புதிய நுட்பங்களை புகுத்தி தனக்கென தமிழ் மண்ணில் தனி முத்திரை பதித்தார்.

ஓவியம் என்றால் 'ஆட்டீஸ் மணியம்' என்ற உயர் நிலைக்கு வந்தார். யாழ்ப்பாணத்தில் பெரிய கட்டவுட் வைக்கும் முறையை இவரே அறிமுகப்படுத்தினார். 80 அடி 100 அடி உயர கட்டவுட்கள் மூலம் ரசி கர்களை தம்வசம் ஈர்த்தார்.

சுமார் 20,000ற்கு மேற் பட்ட ஓவியப்படைப்புக்கள், இவரின் ஆலோசனையின்படியே முன்னணி திரைப்பட அரங்குகள் அமைக்கப்பட்டன.

திரைப்படத் தயாரிப்பை முதன் முதலில் யாழ்.மண்ணில் மேற் கொண்டார். தென்னிந்திய நடிகர்களானஎம்ஜியார், சிவாஜிஇவரை நேரடியாக அழைத்து கௌரவப் படுத்தினர்.

பல ஆலயங்களில் இவரது ஓவியப் படைப்புக்கள் உள்ளன. நயினை நாகபூஷணி அம்மனின் படம் பிரதியாக்கம் செய்து இன்றும் பல இடங்களில் வைத்து பூசிக் கப்படுகின்றது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் ஏராளமான உருவ ஓவியங்களை வரைந்தார். கப்டன் மாலதி, கப்டன் அருள் போன்றவர்களின் 50அடி, 70அடி உயர கட்டவுட்கள் இவரது படைப்பே.

Pavl.P.Harris என்பவரின் படம் வரையப்பட்டு அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுபல கௌரவங்கள் பெற்றார். (FOUNDER OF ROTARY)

*பெற்ற பட்டங்கள்:*

1960 - முனியப்பர் தேவஸ்தானம் - 'ஓவியச் செல்வன்'

1970 - நல்லை திருஞான சம்பந்த ஆதீனம் - 'ஓவியச்சுடர் மணி'

1993 - றோட்டறிக் கழகம் - 'VOCATIONAL EXCELLECE AWARD'

1993 - Pavl.P.Harris ஓவியம் வரைந்தமைக் கான பாராட்டு.

1994 - அனைத்துலக MGR பேரவை - 'ஓவியக்கலைச்செம்மல்'

1995 - அகில இலங்கைகம்பன் கழகம் - 'கைலாசபதிவிருது'

1998 - இலங்கை அரசு கலா பூஷணம் விருது

1998 - அகில இலங்கை இந்துசமய பேரவை - 'ஓவியப்பேரருவி'

2003 - ஸ்ரீபால கதிர்காமம் - 'குகஸ்ரீ பட்டம்.

2005 - நல்லூர் பிரதேச செயலகம் - கலைஞானச் சுடர்.

2006 - அச்சுவேலி இராஜ மாணிக்க கல்யாண மண்டபத்தின் கௌரவிப்பு (வீடியோ கலா மினி) இறுதியாகப் பெற்ற கௌரவிப்பு இதைவிட பல பொது நிறுவனங்கள், ஆலயங்கள் கௌரவித்ததுடன் ரூபவாகினி, தமிழீழ தேசிய தொலைக்காட்சி, புலிகளின் குரல், பத்திரிகைகள் இவரைப்பற்றிய விடயங்களை பல தடவைகள் வெளிப்படுத்தின.

இவர் தமிழ் மண்ணிற்கு விட்டுச் சென்றது தனது சீடபரம்பரையை. தனது ஓவிய வாரிசாக இவரின் சகோதரியின் மகள்



செல்வி யசிந்தா செல்வ ரெட்ணம் உள்ளார். ஏராளமான சிஷ்யர்களை உருவாக்கி உள்ளார். குறிப்பாக ஞானகுரு ஆட்ஸ் (கொழும்பு), கிருபா ஆட்ஸ் (ஜேர்மன்), கிரி ஆட்ஸ், எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ், மேரு ஆட்ஸ், கணேஸ் ஆட்ஸ், பிரபா ஆட்ஸ் (மலேசியா), அமரர் குணம் ஆட்ஸ், ரவி ஆட்ஸ் (வவுனியா), ரவி ஆட்ஸ் (கோண்டாவில்), குரு ஆட்ஸ் (திருமலை), பௌமி ஆட்ஸ் (புத்தளம்), ஓவியத்தில் நாட்டமுள்ள ஒவ்வொருவரும் இவரின் தரிசனத்தின் பின்னரே நன்னிலைக்கு வந்துள்ளதை வரலாறு செப்பும்.

சி.யசோதரன்
*ஆசிரியர் , யாழ்.இந்துக்கல்லூரி*

# அனைத்து மக்களுக்கும் அரசு சிறப்பான சுகாதார சேவையை பெற்றுக்கொடுக்கும்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அனைத்து மக்களுக்கும் சிறப்பான சுகாதார



சேவையை பெற்றுக்கொடுக்குமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

அதன் அடிப்படையிலேயே சுகாதார சேவை உள்ளிட்ட அனைத்து அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளையும் அதிகரிக்கும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்று தெரிவித் தார்.

கல்விமான்களுக்கு தேவையான சலுகைகளையும், வசதி களையும் வழங்கி அவர்களின் சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமெனவும் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவே அரச ஊழியர்கள் அர்ப்பணிப்போடு செயற்பட்டு பொதுமக்களுக்கு செயற்திறன் வாய்ந்த சேவைகளை வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வறிய சமூகத்தவர் பற்றி கூடுதல் கவனம் செலுத்தி அவர்களுக்கு சேவையாற்ற வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். தென்னிலங்கையின் தங்காளை நகரில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டத் தொகுதியை தொடங்கிவைத்து உரையாற்றுகையில், ஜனாதிபதி இக்கருத்துக்களைத் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றுகையில், சுனாமியால் இடம்பெயர்ந்தவர்களுக்கு விரைவில் நிரந்தர வீடுகள் வழங்கப்படும் என்றும் கிராமத்தையும் நகரத்தையும் சமாந்தரமாக அபிவிருத்திசெய்யும் திட்டங்கள் விரைவில் அமுல்படுத்தப்படும்.

இந்தத் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அனைத்து இனமக்களும் ஒத்துழைப்புவழங்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (சு-9)



யாழ்.மாவட்ட உள்ளூராட்சி தேர்தலுக்கான வாக்கு சீட்டினை விநியோகம் செய்யும் பணியில் தபால் ஊழியர்.

(படம்:- திலீவின்பன், எஸ்.ரி.ராஜா)

# 42 ஆயிரம் இளைஞர் யுவதிகளுக்கு விரைவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்

நாடளாவியரீதியில் 42ஆயிரம் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு விரைவில் பொதுத்துறையில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நாடளாவிய ரீதியில் உள்ள சகல பிரதம செயலாளர்களிடம் இருந்தும் வேலைவாய்ப்பு தொடர்பான விவரங்களை கோரியுள்ளார்.

வேலைவாய்ப்பின்றி உள்ள ஜீ.சீ.ஈ.உயர்தரம் படித்தவர்களுக்கும், பட்டம் பெற்று இதுவரை வேலைவாய்ப்புக் கிடைக்காதபட்டதாரிகளுக்கும் இதன் மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

கணனியிலும், ஆங்கிலத்திலும் சிறப்பு தேர்ச்சிபெற்றவர்களுக்கு ஆட்சேர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான விவரங்கள் பத்திரிகைகள் மூலம் வெளியிடப்பட்டு விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலாளர்கள் மூலம்வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-9)

# 45 கோடி அமெ.டொலர் செலவில் நுரைச்சோலை அனல் மின் திட்டம்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் கட்டுமானம் பணிகள் அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ளன.

இலங்கை அரசாங்கமும், சீன அரசாங்கமும் இது தொடர்பான இறுதி உடன்படிக்கையில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற இவ் நிகழ்வில் இலங்கையின் சார்பில் மின்சார சபையைச் சேர்ந்த சூனா வெல் கொடவும், சீன அரசாங்கத்தின் சார்பில் அந்நாட்டு அரச பிரதி நிதி டாங் ஜெயத்துவானும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்கள்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது பாரிய அபிவிருத்தித்திட்டமாக நுரைச்சோலை அனல் மின் திட்டம் அமைந்துள்ளது.

இந்தத்திட்டத்தை 2010ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் முதற்கட்டத்தில் தேசிய மின்சார வலைபின்னலுக்கு 300 மெகா வாற்ஸ் மின்சாரம் சேர்க்கப்படும்.

2ஆம் 3ஆம் கட்டங்களாக சேர்க்கப்படும் மின்சாரத்தின் அளவு 600 மெகாவாற்ஸ் ஆகும். இந்தத்திட்டத்திற்கான மொத்த செலவீனம் 45 கோடி அமெரிக்க டொலர்கள் இந்த முழுத்தொகையையும் சீனா வழங்குகின்றது.

இத்திட்டத்தின் காரணமாக தமது குடியிருப்புக்களை இழக்கும் 74 குடும்பங்களுக்கு வேறு இடங்களில் வீடுகளை அமைத்துக்கொடுக்க மின்சக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையம் உருவாக்கப்படும் போது சுமார் 3ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்புக்கள்கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (து-9)

# அடிக்கல் நாட்டல்

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் தாமோ தரம் பிள்ளை வீதியில் உள்ள 40 பரப்பு காணியில் நடைபெற்றது.

முன்னாள் இந்துக்கல்லூரி அதிபர் கயிலேஸ்வரன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. சுவிஸ் அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் (SDC) இவ் ஆரம்ப பாடசாலை கட்டடம் அமைக்கப் படவுள்ளது.

நிகழ்வில் சுவிஸ் அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனப் பிரதிநிதிகளான மார்க் அன்றே புன்சிலி, ரூடுவ் பான் கௌசர், பியட் எ.கிளின் ஆகியோரும் தென்மராட்சி வலய பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் ஆகியோரும் ஆரம்ப பாடசாலை மாணவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர்.

சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவன பிரதிநிதிகள், தென்மராட்சி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் செல்வராசா மற்றும் பொறியியலாளர்கள் மங்கள விளக்கேற்றி அடிக்கல்லை நாட்டிவைத்தனர். (சு-108)

அமைதிக்கு உழைப்பதே உலகத்திற்கு நாம் செய்யும் கடமையாகும். சமாதான முழக்கங்களை வெறுமனே கூறிக்கொண்டிராமல் அமைதிக்காகத் தீவிரமாகப் பாடுபட்டால்தான் வருங்கால உலகம் பாதுகாக்கப்படும். - டாக்டர் இராதாகிருஷ்ணன

வலம்புரி

## பொறுமை காத்து பணி செய்த விசேட தூதுவர் எரிக்சொல்

இலங்கையின் சமாதானப் பணியில் நோர்வேயின் விசேட தூதுவராகவிருந்த எரிக் சொல்ஹெய்ம் அப் பணியிலிருந்து விடுபட்டுக் கொள்கின்றார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் எரிக் சொல்ஹெய்மின் அர்ப்பணிப்புடனான சேவையை இலங்கை மக்கள் எளிதில் மறந்துவிட மாட்டாாகள்.

இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதால் அவரின் இதயசுத்தியான பணி மக்கள் படிப்பதற்கான பாடமாகக் கொள்ளத்தக்கது.

அரசு - புலிகள் ஆகிய இருதரப்பையும் சமாதான மேசையில் ஒன்றாக இருக்க வைப்பதென்பது சாதாரண விடயமல்ல.

ஆனால், அதனை யதார்த்தத்தில் நிஜமாக்கிய பெருமை எரிக்சொலுக்குண்டு. 2002 ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருதரப்புத் தலைவர்களும் கைச்சாத்திடுவதில் எரிக் சொலின் முன்னெடுப்பு பாராட்டுவதற்குரியது.

அன்று செய்யப்பட்ட யுத்தநிறுத்தமே இன்று வரை இந்த நாட்டில் மனித உயிர்களை பாதுகாக்கின்றது எனலாம். விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இத்தகைய சாதனைகளைப் படைப்பதற்கு அவரின் பொறுமை, மதிநுட்பம், இரகசியம் காக்கும் பாங்கு, அரசியல் புலத்தில் இருக்கக் கூடிய ஆழ்ந்த அனுபவம் என்பவையே காரணமெனலாம்.

குறிப்பாக இருதரப்பிற்குமிடையில் தூது செல்லும் எரிக் சொல்ஹெய்ம் ஒரு போதும் தூதில் எடுத்துச் சென்ற விடயங்களை ஊடகங்களுக்கோ அன்றி வேறு யாரிடமாவதோ கூறுவது கிடையாது.

ஊடகங்கள் மோப்பம் பிடித்து அவரைத் துருவித்துருவி கேட்ட போதெல்லாம் அவர் விடயங்களை - இருதரப்புக் கருத்துக்களை அவிட்டு விடாமல் பாதுகாத்தார்.

அந்தப் பாதுகாப்பே இருதரப்பும் ஜெனீவாவில் சந்திப்பதற்கு ஏதுவாக அமைந்தது எனலாம்.

சமாதானத் தூதருக்குரிய அத்தனை இலட்சணங்களையும் கொண்ட எரிக் சொல்ஹெய்ம்மை எதிர்மறையாக விமர்சித்த சிங்கள பேரினவாதிகளும் இல்லாமல் இல்லை.

எனினும் ஆகாயத்தின் நிலவு, தன்னைப் பார்த்துக் குறைபவர்களுக்கும் குளிர்மையான ஒ ளியைத் தருவது போல, நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொலும் தனது சமாதானப் பணியைத் தந்துள்ளார். அதற்காக அவருக்கு நன்றி கூறலாம்.

# அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுக்கள் இருந்தால் உடன் நடவடிக்கை எடுப்பேன்!

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதி

(கொழும்பு)

இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள வடக்கு கிழக்கில் ஆயுதக் குழுக்கள் செயற்பட்டால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்து பேசிய போதே மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

ஜெனிவாப்பேச்சுக்களால் மக்கள் நன்மையடைந்துள்ளனர். பெப்ரவரியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய நேரடிப்பேச்சுவார்த்தைக்கு பின்னர் ஒரு சில சம்பவங்களே நடந்துள்ளன.

வடக்கு-கிழக்கில் சட்டம் ஒழுங்கை பொலிஸாரும் இராணுவத்தினரும் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு அதிகம் இருக்கிறது.

அரசாங்க கட்டுப்பாட்டுப்பகுதியில் அரச படைகளை தவிர்த்து எந்த ஆயுதக்குழுவினர் இருந்தாலும் இந்த நாட்டின் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தற்போதைய நிலைமைகளை மேம்படுத்துகிற பொறுப்பு இரு தரப்பினருக்கும் உண்டு. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதா? இல்லையா?என்பதை விட இந்த நாட்டில் வன்முறை இல்லை என்பது தான் முக்கியம். இது வார்த்தை யுத்தம் நடத்துகிற நேரம் இல்லை. அதைவிட முக்கியமானவற்றை நாம் செய்ய வேண்டியுள்ளது.



இரண்டாம் சுற் றுப் பேச்சுக்கள் திட்டமிட்டபடி நடக்கும் தற்போதைய நிலைமை சீரடையும். ஜே.வி.பி ஒரு அரசியல் கட்சி.

இந்த ஜனநாயக அரசியலில் அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு உரிமை உண்டு. இவர்கள் வேறுபட்ட சிந்தனை உள்ளவர்களாக இருந்தாலும் அவர்களோடு இணைந்துகொண்டு செயற்படுவதுதான் என் பணி. இதைத்தான் நான் தொழிற்துறை அமைச்சராக இருந்த போதும் செய்தேன்.

அது ஒன்றும் சாதாரணமான காரியம் அல்ல. தொழிலாளியும் முதலாளியும் என்னுடன் சந்தித்து பேசிய பிறகு தாங்கள் வெற்றிபெற்றதாக அறிவித்துக் கொள்ளவர்கள். ஆனால் இருவரும் வெற்றி பெறுவதற்கு காரணமாக இருந்த நான் அதைப்பற்றி அக்கறை கொள்வதில்லை என்றார் மஹிந்த ராஜபக்ஷ .

(க)

## ஏப்ரலில் பேச்சுவார்த்தை அரச குழுவில் மாற்றம்?

(கொழும்பு)

ஜெனீவாவில் ஏப்ரல் மாதம் நடத்தப்படவுள்ள பேச்சுக்களில் அரசாங்கம் சார்பில் பங்கேற்கும் குழுவில் புதியதாக சிலர் சேர்க்கப்படக்கூடும் என்று தெரிகிறது.

பெப்ரவரிப்பேச்சுக்களில் பங்கேற்ற சில உறுப்பினர்களின் நடத்தைகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிருப்தி அடைந்திருப்பதால் இம்முடிபு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும் பேச்சுக்குழுவில் இடம்பெற்றிருந்த ஒரு அமைச்சர் நீக்கப்பட்டு அவருக்கு பதில் மற்றொரு அமைச்சர் இடம்பெறவுள்ளார்.

அதேபோல ஜெனீவா செல்லும் அரச ஊடகக்குழுவினருக்கு புதிய உத்தரவுகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிறப்பிக்கவுள்ளார்.

(க)

## இலங்கையுடனான இந்தியாவின் நெருக்கமான உறவு நீடிக்குமாம்

### இந்தியச் சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடனான இந்தியாவின் நெருக்கமான உறவு நீடிக்கும் என்று இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் சோமன் நாத் சட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

சோம்நாத் சட்டர்ஜியை இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் சி.ஆர். ஜயசிங்க சந்தித்துப் பேசினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான பொதுவான சிக்கல்களைப் பகிர்ந்துகொள்வது இரு நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் இச் சந்திப்பின்போது சோம்நாத் சட்டர்ஜி கூறினார்.

இந்தியாவின் இந்த உறுதி மொழிக்கு சி.ஆர். ஜயசிங்க நன்றி தெரிவித்தார்.

மேலும் கொழும்பில் இம் மாத இறுதியில் நடை பெறவுள்ள சார்க் நாடுகளின் சபா நாயகர்கள் மாநாட்டில் பங்கேற்க வருமாறு இலங்கையின் சபாநாயகர் லொக்குப் பண்டார சார்பில் சி.ஆர். ஜயசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோளை சோம்நாத் சட்டர்ஜி எற்றுக் கொண்டார்.

(க)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய க.கா.குழுத்தலைவர் அடுத்த வாரம் இலங்கை வருவார்

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் உல்ப் ஹென்ரிக்சன் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் கண்காணிப்புக் குழுத்தலைவர் பொறுப்பை ஏற்கிறார். இலங்கை பயணத்தின்போது முதலில் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை சந்தித்து நிலைமைகளை அறிய உள்ளார்.

கண்காணிப்புக்குழு தலைவராக உள்ள ஹக்ரூப் ஹொாக்லண்டுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம், தற்போதைய நிலைமைகள் ஆகியவை தொடர்பாக ஹென்ரிக்சன் விவாதிக்கவுள்ளதாக கண்காணிப்புக்குழுப்பேச்சாளர் ஹொலென் ஒலப்ஸ்டொட்டிர் கூறினார்.

(க)

## உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கவுக்கே வெற்றி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வாக்குகள் சிதறுவதால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அது இலாபமாக அமையக்கூடும் என்று தெரிகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை ஆதரிக்கும் ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமய ஆகியன தனித்துப் போட்டியிடுகின்றன.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் 20 ஆசனங்கள் மட்டுமே இதர கூட்டணிக் கட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 308 இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது சின்னத்தில் போட்டியிடுகிறது.

தேர்தல் பிரசாரத்திலும் கூட ஐக்கிய மக்கள் கூட்டமைப்பானது அரசாங்கத்தை ஆதரித்தாலும் தனித்துப் போட்டியிடுகிற ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமயவை பகைத்துக்கொண்டு பரப்புரை செய்ய விரும்பவில்லை.

அண்மையில் தேர்தல் பரப்புரைக்கூட்டம் ஒன்றில் பேசிய சுகாதாரத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறாமல் அனைவரும் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று ஜே.வி.பி மற்றும் உறுமயவினருக்கு அஞ்சிப்பேசியுள்ளனார்.

இதனால் வாக்குகள் சிதறுகின்ற நிலை இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினர் அச்சமடைந்துள்ளனர்.

(க)

## பெற்றோல் கிணற்றில் தீப்பிடித்தது 130 தொழிலாளர்கள் ஹெலிகொப்டர் மூலம் மீட்பு

(லண்டன்)

இங்கிலாந்தில் உள்ள ஸ்காட்லாந்தில் வடக்கு கடல் பகுதியில் பெற்றோல் கிடைக்கின்றது இதைத் தோண்டி எடுப்பதற்காக கிணறு அமைக்கப்பட்டது.

இந்த பெற்றோல் கிணற்றில் நேற்று முன்தினம் திடீர் எனத் தீப்பிடித்தது. உடனே அங்கு வேலை செய்யும் 186 தொழிலாளர்களில் 130 பேர் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டனர். 56 பேர் மட்டும் பெற்றோல் கிணறு அருகே தங்கியுள்ளனர்.

தீ அணைக்கப்பட்டுவிட்டது. இருந்தபோதிலும் புகை வெளியேறியபடி உள்ளது. தீ விபத்து காரணமாக பெற்றோல் கிணறு மூடப்பட்டது.

இந்தக் கிணற்றில் இருந்து தினமும் 25ஆயிரத்து 200 பீப்பாய்க் கச்சா எண்ணெய் எடுக்கப்பட்டு வந்தது.

(க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



இறைவனுடன் இணைந்து வாழும் போதுதான் அவனது கிருபை எல்லையற்றது என்பதை நாம் சரியாகப் புரிந்து கொள்கின்றோம். கடவுள் கிருபை அருளாளர்கள் வாழ்வில் ததும்பி விளையாடுகின்றது. இறைவன் கருணை வெள்ளமாக கருணைக்கடலாக விளங்குகின்றான். எனினும் உயிர்கள் அவனை நாடாமல் தாகத்தால் துடிக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்

# காணாமல் போனோரில் சிலர் புலிகளுடன் இணைந்துள்ளனர்

## மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் காணாமல் போனோர் தொடர்பாக சுமார் 16 முறைப்பாடுகள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.



இவர்களில் 16 பேர் தொடர்பாக தகவல்கள் கிடைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி றோகித பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

இவர்களில் சிலர் திருமணம் செய்வதற்காக வீட்டைவிட்டு வெளியேறியவர்கள். சிலர் விடுதலைப்புலிகளுடன் இணைந்துள்ளனர். சிலர் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வேறு சிலர் இராணுவத்தினராலே அல்லது பொலிஸாராலோ மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது பயத்தின் காரணமாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை காணாமல் போனோர் சம்பந்தமான பார்வையிடும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் உறவினர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் றோகித பிரியதர்ஷன மேலும் தெரிவித்தார். (ச-132,133)

## மீன்பிடித் தடையை...

அறிக்கை ஒன்றினையும் விடுத்திருந்தார்.

ஆனால் யாழ்.குடாநாட்டில் மீன்பிடித் தடை கெடுபிடி நடவடிக்கை தொடர்ந்து வருகின்றது எனக் கூறினார்.

மீனவர்களுடனான இச் சந்திப்பில் எதிர்வரும் 21 ஆம் திகதி நள்ளிரவு வரை அரசுக்குக் காலக்கெடு விதிக்கவும் 22 ஆம் திகதி ஊடகவியலளர் மாநாட்டை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மீன் பிடித்தடையினை நீக்காதுவிடின் எதிர்வரும் 24 ஆம்திகதி யாழ்.மாவட்டத்தின் சிவில் நடவடிக்கைகளை முடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் முடிபு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ச-4)

## நோர்வேயை...

போராட்டம் நடத்தப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் செங்கம்பள வரவேற்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

புலிகளது தனி நாட்டை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்கான நோர்வேயின் முயற்சி இது. இது இலங்கையின் இறையாண்மையை ஊறு விளைவிப்பதாகும் என ஆர்ப்பாட்டப் பேரணியின் ஒருங்கிணைப்பாளர் வக்வெல உதித்தேரர் தெரிவித்தார். (ச-4)

## அமைச்ச...

செய்து புதிய அமைச்சர்களை நியமிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்பட்டது.

தொழில்துறை,சுற்றுலா, போக்குவரத்து, விளையாட்டு மற்றும் பொதுநிர்வாகம் ஆகிய அமைச்சர்களே மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சில அமைச்சர்களின் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## உள்ளூராட்சி...

என்பன தொடர்பாக இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

மேலும் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தொடர்பாக இன்றைய கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும் என உதவித் தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யு. பி. சுமனசிறி தெரிவித்தார்.

அப்பிரதேசங்களில் தேர்தல்கள் நடத்துவது தொடர்பாக விரிவாக ஆராய வேண்டியுள்ளதாக குறிப்பிட்ட அவர் இன்றைய கூட்டத்தின் பின்னர் இறுதித் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது வாக்காளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்து வதற்கான ஆவணம் ஒன்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகவும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## மட்டக்களப்பில்...

ணுவத்தினரும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே நேற்றுக்காலை 9 மணியளவில் மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குள் நுழைந்த துணை இராணுவக் குழுவினர் ஓட்டுநர்களையும் நடத்துநர்களையும் தாக்கி பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு நிர்ப்பந்தித்ததாகத்தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## சமாதான வழி...

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஏன் நாங்கள் யுத்தத்திற்குச் செல்லவில்லை என்று பலர் சிந்திக்கலாம். புதிய ஜனாதிபதியின் தலைமையிலான புதிய அரசாங்கம் பிரச்சினைகளுக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே செயற்பட்டுவருகின்றது.

சமாதான வழிமுறைகள் மூலமாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பது அரசாங்கத்தின் நம்பிக்கை. அரசாங்கத்தின் நோக்கமே எமது நோக்கமாகும். எனவே அதனை நிறைவேற்றுவதற்காக நாம் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பலரும் விடுதலைப் புலிகளுக்கு முகம் கொடுப்பதற்கு தகுந்த நிலையிலேயே சமாதானம் பேசினார்கள். விடுதலைப்புலிகள் மீது கொண்டிருந்த நம்பிக்கையினாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அவர்களுடன் பேச்சுக்களை நடத்தவில்லை.

முடிந்தளவில் அவர்களுக்கு சேதம் ஏற்படுத்தினார்கள். ஆனால் தற்போது நிலைமை அப்படியல்ல. நாட்டு மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் கௌரவமான ஓர் தீர்வினை எட்டுவதற்காகவே அரசு பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றது.

நாட்டில் உள்ள சிறுபான்மை மக்களின் குறைகளை, பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் பேசி தீர்க்க வேண்டும் என்பதற்காகவே அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்றது என இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

வவுனியா விஜயத்தினை முடித்துக் கொண்டுஅவர்வெலிஓயா மணலாறு இராணு வத்தளத்திற்கு பயணமானார். (ச-4)


## அதிபர் பரீட்சைக்கான துரித வழிகாட்டல் வகுப்புகள்

**18.03.2006 இன்று காலை 9 மணிக்கு ஆரம்பம்**

கையேடுகள், கடந்தகால வினாக்கள் வழங்கப்படும்.
பரீட்சைத் தினம் வரை வழிகாட்டல் நடைபெறும்.
தொடர்பு:- DDCA (கல்வி நிலையம்)
(யாழ். ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக்கு அருகாமை)
101/10 ஸ்ரான்லி வீதி -021 222 5549
20 யாழ்.பஸ் நிலையம் - 021 222 6818

தகுதியான துறைசார் ஆசிரியர்களால் வழிகாட்டப்படும். (இ)


# எரிக் சொல்ஹெய்மின் விலகல் சமாதானத்தைப் பாதிக்கும்

## ஐ.தே.க. கவலை

சமாதான முயற்சியில் இருந்து ஒதுங்கிக் கொள்ளப் போவதாக நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அறிவித்துள்ளமை இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் தேக்க நிலையைத் தோற்றுவித்து நாட்டில் குழப்பமான சூழலை ஏற்படுத்திவிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எரிக்சொல்ஹெய்மின் அறிவிப்புக் குறித்து ஜே.வி.பியும் ஹெலஉறுமயவினரும் மகிழ்ச்சி அடையலாம். ஆனால் இந்த நிலை நாட்டிற்கு ஒரு போதும் ஆரோக்கியமானதாக அமையாது என அவர் சுட்டிக்காட்டினார்.

தனது அமைச்சுப் பணிகளை முன்னெடுப்பதில் தோன்றியுள்ள வேலைப்பளு காரணமாகவே அவர் தனது சமாதான மத்தியஸ்தர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளுவதாக அறிவித்துள்ளார்.

எனினும் நாட்டில் ஆரோக்கியம் அற்ற சூழலையே அவரது இந்த அறிவிப்புத் தோற்றுவித்துள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அதேவேளை ஜாதிக ஹெலஉறுமய மற்றும் ஜே.வி.பியினரின் எதிர்ப்புக் கோசங்களுக்கு அஞ்சி அவர் பதவியிலிருந்து விலகவில்லை என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்களில் இருந்து அறிய முடிகின்றது.

எவ்வாறெனினும் இலங்கையின் சமாதானப் பணிகளில் நீண்ட காலம் ஈடுபட்டவரும் இலங்கை விவகாரத்தில் அனுபவம் மிக்கவருமான எரிக்சொல்ஹெய்மின் ராஜிநாமாஆனது சர்வதேச அரங்கில் மிகுந்த கவனத்தை ஈர்ப்பதாக அமையும் என்பதில் ஐயமில்லை என அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ச-4)

# குஷ்ரால்- மகிந்த சந்திப்பு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய முன்னாள் பிரதமர் ஐ.கே.குஷ்ரால் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இச் சந்திப்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படுகின்ற சமூக அரசியல் பொருளாதார உறவுகள் குறித்து ஆராயப்பட்டது. (04)

# கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

புனித பத்திரிசியார் கல்லூரியணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையில் 'ராஜன் கதிர்காமர்' கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.15 மணிக்கு கல்லூரியணிகளின் கொடியேற்றல் மற்றும் வீரர்கள் அறிமுகப்படுத்தலுடன் போட்டி ஆரம்பமாகும். (ச-4,5)

# பாதுகாவலன் மண்டபம் நாளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கத்தோலிக்க அச்சக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 'பாதுகாவலன் மண்டபம்' நாளை முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பாதுகாவலன் ஆசிரியர் அருட் திரு. ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ். ஆயர்மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மண்டபத்தைத் திறந்து வைப்பார். (ந)

## அவசரமாகத்...

உடனடியாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் 110 இராணுவ வீரர்களையும் விமானிகளையும் பொறுப்பேற்றுள்ளனர்.

இது குறித்து அமெரிக்காவுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை மீட்கப்பட்ட இராணுவ வீரர்கள் அனைவரும் விமான நிலையத்தில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் நேற்று மாலை தெரிவித்தது. (ச-4)

## புதிய சமாதானத் தூதுவராக...

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தலைமையேற்றுச் செயற்பட்டுவரும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தனது அமைச்சின் கடமைகளை சரியாக மேற்கொள்ள முடியாமையினால் இலங்கையின் சமாதான முயற்சிகளை நோர்வேயில் இருந்தவாறே கண்காணிப்பார்.

அவருக்கு, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்ஸ்ஸன் பௌயர் இலங்கைக்கு விஜயங்களை மேற்கொண்டு அமைதி முயற்சிகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பார்.

அத்துடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் அரசு மற்றும் விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவார் என தெரிவிக்கப்பட்டது.

இவரது நியமனம் குறித்து அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான முழுப் பொறுப்பும் தன்னிடமேயுள்ளதாகவும் சமாதான முயற்சிகள் தொடர்பாக தான் தொடர்ந்து பணியாற்றவுள்ளதாகவும்தெரிவித்த சொல்ஹெய்ம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின் போது தானே பங்கேற்கவுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஜோன் ஹன்ஸ்ஸன் மத்திய கிழக்கு அமைதி முயற்சிகளில் 12 ஆண்டுகள் பணியாற்றியவர். நோர்வே வெளிவிவகார அமைச்சின் அமைதி முயற்சிகள் மற்றும் அகதிகள் பிரச்சினைகள் தொடர்பான பணிகளில் பங்கேற்றவர் ஆவார்.

அமைதி முயற்சிகள் தொடர்பான ஆய்வுகளுக்காக ஓகஸ்ட் 2005 ஆம் ஆண்டு நோர்வே வெளிவிவகார அமைச்சில் இணைந்தார். தற்பொழுது Fafo Institute for Applied International Studies என்ற நிறுவனத்தின் மேலாண் இயக்குநராக பணியாற்றி வருகின்றார்.

இதனிடையே நோர்வே அமைதி முயற்சி பணியிலிருந்து எரிக் சொல்ஹெய்ம் விலகிவிட்டதாக வெளியான செய்திகளை மறுத்துள்ள நோர்வேத் தூரகம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் கீழ்த்தான் பணிபுரிவார் என்று விளக்கமளித்துள்ளது. (ச-4)









இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 18.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.